# எண்களில் உங்கள் அதிஷ்டம்




மூளாய் அருணாசலம்
MOOLAI ARUNASALAM

JPL
C5087

...na Publications
அருணா பப்ளிகேஷன்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்களில் உங்கள் அதிஷ்டம்

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

KOHA
JPL

மூளாய் அருணாசலம்
MOOLAI ARUNASALAM

127052

127052

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

Aruna Publications
அருணா பப்ளிகேஷன்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரணம்

| | | |
|---|---|---|
| உரிமை © | :- | ஆக்கியோனுக்கு |
| முதற் பதிப்பு | :- | கார்த்திகை 1997 |
| தலைப்பு | :- | எண்களில் உங்கள் அதிஷ்டம் |
| மொழிமூலம் | :- | தமிழ் |
| ஆக்கியோன் | :- | **மூளாய் அருணாசலம்** |
| முகவரி | :- | ஆஸ்பத்திரி வீதி, மூளாய்,<br>சுளிபுரம். |
| பக்கங்கள் | :- | 56+ |
| அளவு | :- | 150mm x 210mm |
| வெளியீடு | :- | **அருணா பப்ளிகேஷன்ஸ்** |
| கொம்பியூட்டர் டைப்செற்றிங் | :- | **TelePrint (Pvt) Ltd.,**<br>22-1/1, Galle Road, Dehiwela.<br>Tel : 739421. |
| அச்சுப்பதிப்பு | :- | **Starline Printers (Pvt) Ltd.,**<br>213, Grandpass Road,<br>Colombo - 14. Tel: 448677. |
| விலை | :- | ரூபாய் **95/=** |

உ 133.335

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

அண்ட வெளியில் இடையறாது சுற்றிக் கொண்டிருக்கும் ஒன்பது கிரகங்களே மண்ணுலகையும், அதில் அடங்கியுள்ள உயிரினங்களை யும் ஆட்சி செய்கின்றன. இந்தத் தத்துவத்தைச் சோதிடர்களும், விண்வெளி விஞ்ஞானிகளும், வான் இயல் ஆராய்ச்சியாளர்களும், ஏக மனதாக ஏற்றுக் கொண்டுள்ளனர். அதே போன்று 1 தொடக்கம் 9 வரையிலான எண்களே கணித உலகை ஆட்சிபுரிகின்றன என்ற உண்மையும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

கிரகங்களை எண்களால் குறிப்பிடும் ஒரு கலை "எண் இயல்" (Numerology) எனப்படும். மானிட தேகம் எடுத்துப் பிறந்த ஒவ்வொரு வரும், ஒவ்வொரு எண்ணால் ஆளப்படுகிறார்கள். அந்த எண் எது என்று அறிந்து அதன் சக்திகளை வளர்த்தால், வாழ்கையில் அதிஷ்டமும் மகிழ்ச்சியும் உண்டாகும். ஒன்பது கிரகங்களைச் சாந்தப்படுத்தி அவைகளின் தோஷங்களை நீக்கும் இயல்பு நவரத்தினங்களுக்கு உண்டு.

பாடசாலையில் நாம் எண்களைக் கூட்டவும், கழிக்கவும், பெருக்கவும், பிரிக்கவும், கற்றுக் கொண்டோம். ஆனால் எண்களின் சக்தியையோ அவற்றின் குணங்களையோ அறிந்திருக்கவில்லை.

உங்கள் எண் என்ன? உங்கள் பெயரை அதிஷ்டம் உள்ளதாக அமைத்துக் கொள்வது எப்படி? உங்களுக்குப் பொருத்தமான இரத்தினம் எது? உங்களுக்குப் பொருத்தமான திகதிகள் எவை? இவை போன்ற வேறு பல கேள்விகளுக்கு இந்த நூல் விடையளிக்கிறது. படித்துச் சிந்தித்து, ஆராய்ந்து பயன் பெற வேண்டுகிறேன்.

எண் இயல் ஆழமாக ஆராயப்பட்டு வரும் ஒரு கலை. அதன் அனைத்துப் பகுதிகளையும் இந்தச் சிறிய நூலில் குறிப்பிடுவது இயலாதகாரியம். வாசக நேயர்கள் தங்கள் பெயர்களைப் பொருத்தமான, அதிஷ்டம் தரும் எண்ணில் அமைத்து, உபயோகித்து. மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்ற ஒரே நோக்குடன் இந்த நூலை வெளியிடுகிறேன்.

ஆஸ்பத்திரி வீதி,
மூளாய்,
சுளிபுரம்.

**மூளாய் அருணாசலம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருள் அடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| அத்தியாயம் | 1 | மனிதனும், கிரகமும் | 1 |
| | | கிரகமும், எண்ணும் | |
| | | எண்ணும், மனிதனும் | |
| அத்தியாயம் | 2 | எண் | 3 |
| | | நட்பு பகை எண்கள் | |
| அத்தியாயம் | 3 | சூரியன் | 6 |
| அத்தியாயம் | 4 | சந்திரன் | 12 |
| அத்தியாயம் | 5 | குரு | 18 |
| அத்தியாயம் | 6 | இராகு | 24 |
| அத்தியாயம் | 7 | புதன் | 28 |
| அத்தியாயம் | 8 | சுக்கிரன் | 33 |
| அத்தியாயம் | 9 | கேது | 38 |
| அத்தியாயம் | 10 | சனி | 43 |
| அத்தியாயம் | 11 | செவ்வாய் | 48 |
| அத்தியாயம் | 12 | பிறப்பு எண்ணும், பெயர் எண்ணும் | 53 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் - 01

## மனிதனும் கிரகமும்

உலகத்தில் உள்ள அனைத்து உயிரினங்களும் பலகோடி கிலோ மீட்டருக்கு அப்பால் சஞ்சாரம் செய்யும் கிரகங்களின் ஆட்சிக்கு உட்பட்டே இயங்குகின்றன. ஒன்பது கிரகங்களுள் சந்திரனை எடுத்துக் கொள்ளுங்கள். சந்திரன் பூமியில் செலுத்தும் ஈர்ப்புச் சக்தி அனைவரும் அறிந்ததே. பௌர்ணமியன்று கொந்தளிக்கும் கடல் அமாவசையன்று அடங்கிவிடுகிறது. சந்திரனின் சக்தியால் நீரில் ஏற்படும் விளைவுகள் போல, நிலத்திலும் மாற்றங்கள் ஏற்படுவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். நீரிலும் நிலத்திலும் மாற்றங்களை ஏற்படுத்தும் சந்திரன் மனிதனிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது தெளிவு.

மனநோய் பௌர்ணமி தினத்துக்கு முன்பு வரும் நாள்களில் படிப்படியாகக் கூடி, அன்று உச்ச நிலையை அடைவது அனைவரும் அறிந்த விஷயம், சந்திரன் பூமியிலும் அதில் உள்ள உயிரினங்களிலும் செலுத்தும் ஆதிக்கத்தை மேலே கூறப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் தெளிவாகப் புலப்படுத்துகின்றன அல்லவா?

கிரகங்களில் சிறியதாகக் கருதப்படும் சந்திரனுக்கு இவ்வளவு வலிமை இருக்குமானால், அதைவிடப் பல மடங்கு பெரியவைகளான மற்றக் கிரங்களின் சக்தி நிச்சயமாக மனிதரில் பிரதிபலிக்கும் என்பதைக் கூறவும் வேண்டுமா?

## கிரகமும் எண்ணும்

எண் சோதிடம் என்பது கிரகங்களை எண்களால் குறிப்பிடும் ஒரு முறை. மனித வாழ்க்கையில் கிரகங்களால் ஏற்படும் விளைவுகளை ஒப்புக் கொள்ளுபவர்கள், தடையின்றி எண் சோதிடத்தையும் ஒப்புக் கொள்ளுவர். எண்களுக்குத் தனிச் சக்தி உண்டு. விசித்திர குணங்கள் உண்டு. உதாரணமாக, ஒன்பதை, எந்த எண்ணால் பெருக்கினாலும், விடையும், விடையின் கூட்டுத் தொகையும் ஒன்பதாகவே இருக்கும் ஒரு அதிசயத்தைக் காணலாம்.

9 X 2 = 18 : 1 + 8 = 9
9 X 3 = 27 : 2 + 7 = 9
9 X 4 = 36 : 3 + 6 = 9
9 X 5 = 45 : 4 + 5 = 9
9 X 6 = 54 : 5 + 4 = 9
9 X 7 = 63 : 6 + 3 = 9
9 X 8 = 72 : 7 + 2 = 9
9 X 9 = 81 : 8 + 1 = 9

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியாக ஒவ்வொரு எண்ணுக்கும் விசித்திர குணம் உண்டு. "இதன் காரணம் என்ன" என்று கேட்டால் "அது அந்த எண்ணின் விசித்திரம்" என்று மட்டுமே பதில் கூற முடியும். இதை விஞ்ஞானிகளும் விளக்க முடியாது.

எண்களும் கணக்குகளும் மனிதன் தானாகவே தன் மூளையில் கற்பனை செய்து கண்டு பிடித்த விஷயங்கள். ஆனால் அவற்றின் விசித்திர குணங்களைக் கண்டு மனித இனமே ஆச்சரியப்படுகிறது.

ஒன்றிலிருந்து ஒன்பது வரையிலான எண்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கிரகத்தைக் குறிப்பிடுவன. அவை கீழ்க்காணும் முறையில் அமையும்.

1. சூரியன் Sun
2. சந்திரன் Moon
3. வியாழன் Jupiter
4. இராகு Urenus - (இது சூரியனின் சாயல் கிரகம்)
5. புதன் Mercury
6. சுக்கிரன் Venus
7. கேது Neptune - (இது சந்திரனின் சாயல் கிரகம்)
8. சனி Saturn
9. செவ்வாய் Mars

## எண்ணும் மனிதனும்

உலகத்தில் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் "ஒரு எண்" உண்டு. வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகள் அனைத்தும் இந்த எண்ணால் தொடர்புபடுத்தப்படுவ்னவாகவே இருக்கும். நன்மையும் தீமையும், அதிஷ்டமும், துரதிஷ்டமும், இந்த எண்ணைப் பொறுத்தே நடைபெறும். ஒவ்வொருவரும் தங்கள் எண்ணை அறிந்து கொண்டு, அதன் வழிப்படி நடந்து கொண்டால் மகிழ்ச்சியாக வாழலாம்.

சாதாரணமாக எண் சோதிடத்தில் எல்லா எண்களும் ஒன்றிலிருந்து ஒன்பதிற்குள் அடங்கிவிடுகின்றன. உதாரணமாக 21 என்ற எண்ணை எடுத்துக் கொள்வோம். இது 2,1 ஆகிய இரு எண்கனைக் கொண்டது. இவற்றை 2+1 என்று கூட்டினால் விடை 3 ஆகும்.

அடுத்து 10 என்ற எண்ணை எடுத்துக் கொண்டால், இது 1 என்ற எண்ணும், 0 என்ற பூஜ்ஜியமும் சேர்ந்ததாக இருக்கிறது. இதை 1+0 என்று கூட்டினால் விடை 1 ஆகும். பூஜ்ஜியத்திற்கு மதிப்புக் கிடையாது. அது சேருகிற எண்ணைப் பொறுத்தே மதிப்புப் பெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் - 02

## எண்

உங்களைப் பற்றி இந்த நூல் குறிப்பிடும் விஷயங் களை அறிந்து கொள்ள, முதலில் உங்களுடைய எண்களை அறிந்து கொள்வது அவசியம். நீங்கள் எப்போது பிறந்தீர்கள்? உதாரணமாக 23.5.1961 என்று வைத்துக் கொள்வோம். நீங்கள் பிறந்த திகதி 23:2+3=5. இது உங்கள் பிறப்பு எண்.

அடுத்து பிறந்த திகதி மாதம் வருடம், மூன்றையும் கூட்டினால், 2 +3+5+1+9+6+1 = 27 : 2 + 7 = 9. இது உங்கள் கூட்டு எண். கீழ்வரும் உதாரணங்களையும் கவனிக்கவும்.

| பிறந்த திகதி | பிறப்பு எண் | கிரகம் | கூட்டு எண் | கிரகம் |
|---|---|---|---|---|
| 10-01-1935 | 1 | சூரியன் | 2 | சந்திரன் |
| 17-01-1953 | 8 | சனி | 9 | செவ்வாய் |
| 07-06-1957 | 7 | கேது | 8 | சனி |
| 20-01-1960 | 2 | சந்திரன் | 1 | சூரியன் |
| 01-09-1963 | 1 | சூரியன் | 2 | சந்திரன் |
| 04-10-1965 | 4 | இராகு | 8 | சனி |

பிறப்பு எண் ஒருவர் எந்த எண்ணின் ஆதிக்கத்தில் பிறந்தவர் என்பதைக் குறிப்பிடும். அந்த எண்ணை அனுசரித்தே அவருடைய சரீரம், குணம், நடை, அறிவு, ஆற்றல், ஆளுமை என்பன அமையும். அது அவருடைய மனநிலை, செயல் திறம், தகுதி போன்றவற்றையும் வெளிப்படுத்தும்.

கூட்டு எண் அவருடைய வாழ்க்கையில் ஏற்படும் நன்மை தீமைகளைத் தெரிவிப்பதுடன், அவரால் எவ்வளவு தூரம் முன்னேற முடியும் என்பதை அறிவிக்கும் சமிக்கையாகவும் கருதப்படுகிறது.

பிறப்பு எண்ணும் கூட்டு எண்ணும் பொருந்தி, அவற் றிற்குப் பொருத்தமாகப் பெயர் எண்ணும் அமைந்தால்தான், வாழ்க்கையில் அதிஷ்டமும், செல்வமும், மகிழ்ச்சியும், பொங்கும் (பெயர் எண் பற்றிய விபரங்களை அத்தியாயம் 12 இல் காணவும்)

உங்கள் பெயர் எண் எது என்பதை அறிவதற்கு உங்கள் பெயரில் உள்ள எழுத்துக்களுக்கு உரிய எண்களைக் கூட்டவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கில எழுத்துக்களும் அவற்றிற்கு உரிய எண்களும் கீழே தரப்பட்டுள்ளன.

1. A I J Q Y
2. B K R
3. C G L S
4. D M T
5. E N H X
6. U V W
7. O Z
8. F P

எழுத்துக்களுக்கான எண்களை உபயோகித்துப் பெயர் எண் அறியும் வகையில், சில உதாரணங்கள்.

S. A R U M U G A M
3 + 1 2 6 4 6 3 1 4 = 30 : 3 + 0 = 3.

N. S. R A G A VA N
5 + 3 + 2 1 3 1 6 1 5 = 27 : 2 + 7 = 9.

K. J E G A T H E E S A N
2 + 1 5 3 1 4 5 5 5 3 1 5 = 40 : 4 + 0 = 4.

DR. C P O N N A M B A L A M
4+2 + 3 +8 7 5 5 1 4 2 1 3 1 4 = 50: 5 + 0 = 5

பெயர் எப்படி எழுதப்படுகிறதோ, அப்படியே அந்த எழுத்துக்களுக்கு உரிய எண்களைக் குறித்துக் கணக்கிடவேண்டும். மரியாதையைக் குறித்து எழுதப்படும் எழுத்துக்களும், (MR, MRS, MISS) பெயருக்குப்பின் வருகிற, பட்டங்களைக் குறிக்கும் எழுத்துக்களும் ( B.A, M.A, BSc, PhD.) சேர்க்கப்படக்கூடாது.

## நட்பு, பகை எண்கள்

உலகில் உள்ள நாடுகளுக்குப் பகை நட்பு நாடுகள் என்று உண்டு. மனிதர்களுக்கும் ஒத்துவராத அல்லது பிடிக்காத, பகை, நட்பு மனிதர்கள் உண்டு. அது போல் 1 தொடக்கம் 9 வரை உள்ள எண்களுக்கும் பகை, நட்பு எண்கள் இருக்கின்றன. இது எண் சோதிடவிதி.

உங்களுக்குப் பிடிக்காத அல்லது மனம் நாடாத, எண்ணம், குணம், நடை, பேச்சு, தோற்றம் உடையவர்களாக எவரேனும் தெரிந்தால், அவர்கள் நிச்சயமாக உங்கள் நட்பு எண்ணினர் அல்ல. பகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணினர் ஆவர். பகை எண்ணினருடன் பொருந்தாத எண்ணினர் ஒரு போதும் அன்போடும், பண்போடும், பாசத்தோடும், நேசத்தோடும், பழகமுடியாது. வாழவும் முடியாது.

இதை மனிதர் அறியாத காரணத்தினால்தான் சிக்கல்கள் முளைக்கின்றன. கணவன் மனைவியோடு சேர்ந்து வாழ முடியாத நிலை, காதல் தோல்விகள், தற்கொலை முயற்சிகள் போன்றவை, நித்தம் நித்தம் பெருகி வருகின்றன. கொலைகளும் நடை பெறுகின்றன. பொருத்தமற்ற பிறப்பு, கூட்டு, பெயர் எண்கள், வாழ்கையை இருள் மயமாக்கி விடுகின்றன. தீராத நோய், திருமணத்தடை, குழந்தையின்மை போன்ற நிலைமைகளை உருவாக்கி விடுகின்றன.

தன்னம்பிகை குறைந்தோரும், மகிழ்ச்சியையும், முன்னேற்றத்தையும் விரும்புவோரும், முதலில் தங்கள் பெயரைப் பொருத்தமான எண்ணுக்கு மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும். அத்துடன் பெயர் எண்ணை மாற்றுவதற்கு முன்பு இருந்த கோணல் குணங்களை ஆராய்ந்து அறிந்து கொஞ்சம், கொஞ்சமாகத் திருந்தி வாழப் பழக வேண்டும். மாற்றிய எண்ணுக்கு உரிய நல்ல குணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். (பெயர் மாற்றம் பற்றிய விபரங்களை அத்தியாயம் 12இல் காணவும்.)

| பிறப்பு எண் | நட்பு எண் | பகை எண் |
|---|---|---|
| 1 | 1 - 4 | 6 - 8 |
| 2 | 7 - 1 - 2 | 8 - 9 |
| 3 | 3 - 9 | 5 - 6 |
| 4 | 1 - 9 | 4 - 6 - 8 |
| 5 | 5 - 9 | 7 |
| 6 | 6 - 9 | 1 - 3 - 4 - 7 |
| 7 | 2 - 7 - 1 - 4 | 8 |
| 8 | 1 - 5 - 9 | 4 - 8 |
| 9 | 9 - 6 - 3 - 5 | 2 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் - 03

## எண் 1 சூரியன் (SUN)

## பிரகாசம் ~ மேன்மை

நவக்கிரகங்களுக்குள் முதன்மையாய் விளங்கும் சூரியன் உலகுக்கு ஒளி பரப்பிப் பிரகாசிப்பதால் பாஸ்கரன் என்று அழைக்கப் படுகிறான். சூரியனுக்கு எதிரே இருள் இல்லை. சூரியன் இல்லாத உலகம் சூனியமாகிவிடும். சூரியன் இல்லை என்றால் ஒளி இருக்காது, வெப்பம் இருக்காது, பருவ காலங்கள் இரா.

இயற்கைக்கு உயிர்ப்பும் செழிப்பும் அளித்து சோபிக்கச் செய்வது சூரியன். சூரியன் இன்றி உயிர் இல்லை, சக்தி இல்லை. உலகம் இல்லை, இயற்கை வளங்கள் நிலைபெறவும், மான்கள் தாவி ஓடவும், மயில்கள் ஆடவும், குயில்கள் பாடவும், மென் புள்ளினங்கள் கூவவும் ஆகிய இயற்கைச் செல்வங்கள் யாவும் சூரியனின் ஆதரவில் தோன்றி வளருகின்றன, பெருகுகின்றன.

ஆங்கில மாதங்களில் வரும் 1. 10, 19, 28. ஆகிய திகதிகளில் பிறப்பவர்கள் எண் 1 இன் அதிபதியான சூரியனின் ஆதிக்கம் பெற்றவர்கள் ஆவர்கள். பிறந்த திகதி மாதம் வருடம், மூன்றையும் கூட்ட, 1 வந்தால் இவர்கள் முதல் தரமான சூரிய ஆதிக்கத்தினர் ஆகிறார்கள். இவர்களே சூரியனின் முழுச் சக்தியையும் பெற்றவர்கள் என்பது எண் கணித சாஸ்த்திர விதியாகும்.

இந்த எண்ணின் கீழ்ப்பிறப்பவர்கள் நுண் அறிவு படைத் தோராகவே இருப்பர். இவர்கள் தாழ்ந்த நிலையில் இருக்க நேரிட்டாலும், அந்த இடத்திலும் பிரகாசிப்பார்கள். இவர்கள் எந்த இடத்திற்குச் சென்றாலும் முக்கியமானவர்களாகவே விளங்குவார்கள்.

தங்கள் சொந்தக் கருத்துக்களுக்கு ஏற்பக் காரியங் களைச் செய்வதாலும், கபடமற்ற குணத்தாலும் வெற்றியையும் புகழையும் அடைவர். இவர்களுக்குக் கோபமும் கர்வமும் அதிகம் இருக்கும். இவர்கள் எண்ணங்களை வெளிப்படையாகவே காட்டுவதால் எதிர்ப்புகளும் விரோதங்களும் தோன்றுகின்றன. தந்திரம் நிறைந்தவர்களாகையால் எதிர்ப்புகளை எளிதில் வென்று விடுவர். சூரியனைப் போல் இவர்கள் எந்த நிலையிலும் அடுத்தவருடைய உதவியை நாடாது தமது முயற்சியினால் முன்னேறுவர்.

எண் 1 நபர்கள் சுயகாரியப் புலிகள். தமது காரியங் களைச் சாதித்துக் கொள்வதில், பிறகுக்கு ஏற்படும் கஷ்ட, நஷ்டங்களையும் மன வேதனைகளையும் கவனிக்க மாட்டார்கள். சூரியன் தகிக்கும் போது ஜீவராசிகள் உஷ்ண மிகுதியால் துன்பமடைகின்றன என்பது அனுபவரீதியான உண்மை. பிறர் என்ன கஷ்டங்களுக்கு உள்ளானாலும் பறவாயில்லை தமது காரியங்கள் முடிய வேண்டும் என்ற நோக்கம் உடையவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயம், சந்தேகம், கோழைத்தனம், ஆகியன இவர்களிடம் தலை காட்டுவதில்லை. பலம், சகிப்புத்தன்மை, விடமுயற்சி, விட்டுக் கொடாமை போன்ற குணங்களுடைய இவர்கள் சந்தர்ப்பம் வரும் என்று காத்திருப்பதில்லை. தீவிர சிந்தனை உடையவர்களாகையால் சந்தர்ப்பத்தை தாமே சிருட்டித்து முயற்சியில் வெற்றியும் காணுவர்.

எண் 1 நபர்கள் இயற்கைத் திறன், தன்னம்பிக்கைத் திடம், முன்னேற்ற சிந்தனையுடையவர்கள். தம்மைச் சார்ந்தவர்களுக்கு ஊக்கம், தைரியம், மனோவேகம் ஊட்டுபவர்களாகவும், வழிகாட்டிகளாகவும் திகழ்வார்கள். இருள் முடிந்த பின்னர் சூரியனை அனைவரும் ஆவலுடன் வரவேற்பது போல கஷ்டத்துக்கு முற்றுப் புள்ளிவைத்துக் கரையேற்றிவிட 1 எண் நபர்களை யாவரும் விரும்பி வரவேற்பர்.

எண் 1 மனிதர் வாழ்க்கையில் முன்னேற்றப் பாதையிலே செல்பவர்கள் என்று சொல்லப்படுவது உண்டு. இது பெரும்பாலும் ஏற்கக் கூடியதே. எவ்வாறாயினும் சூரியன் ஒளி தருவது போல இந்த நபரும் பிரபலமடைவர். ஆனால் மற்ற எண்களின் சேர்க்கை, மற்றும் கூட்டு எண்ணின் பலம், பெயர் எண்ணின் சக்தி ஆகியன மாறுபாடான பலன்களைத் தரக் கூடும். இந்த எண்களும் பொருந்தி இருப்பின் சிறந்த பலன்களை எதிர்பார்க்கலாம்.

பயன் தரங்கூடிய பல விதமான தொழில்களில் இவர்களைக் காணலாம். குறிப்பாக அரசாங்க பதவிகளில் பிரகாசிப்பார்கள். ஆனால் இவர்களை நல்ல அதிஷ்டசாலிகளாகக் காண்பது அரசியலில்தான். பிறருக்காக உழைக்க வேண்டும். ஏதேனும் நன்மை செய்ய வேண்டும் என்று சதா நினைப்பவர்கள். தமக்குத் துன்பமோ, துயரமோ தேவையோ ஏற்பட்டபோது அதன் சுமையைக் குறைக்கப் பிறர் உதவியை நாடவும் தயங்குவர்.

எண் 1 மனிதர் அவர்கள் விரும்பும் இயல் இசை நாடகத்துறையில், இணையற்றவர்களாகவே இருப்பர். சிலர் சிறந்த எழுத்தாளர்களாகவும், நூலாசிரியர்களாகவும், பதிப்பாசிரியர்களாகவும், பேச்சாளர்களாவும், நீதிபதிகளாகவும், அரசியல் தலைவர்களாவும், புகழ் பெற்ற மருத்துவர்களாகவும், சோதிடர்களாவும், மிகவும் அதிஷ்டசாலிகளாக வாழக்காணலாம்.

உலக அரசியலில் முக்கிய பங்கு வகிப்பவர்கள் இவர்களே. பெயர் எண் 1 ஆக, அமைந்தவர்களும் இந்த எண்ணின் ஆதிக்கர்களே.

**குறிப்பு :-**

ஜூலை 21 முதல் ஓகஸ்ட் 20 வரையிலான காலப்பகுதியில் பிறந்தவர்களுக்கு மேற்கண்ட பலன்கள் மேலும் சிறப்பாக அமையும். இவர்கள் எண் 1 ஆதிக்கரில் மிகவும் மேன்மையானவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சூரிய ஆதிக்கம் நன்கு அமைந்தவர்களிடம் காணப்படும் பொதுவான குணங்கள் :-**

தீவிரமாகச் சிந்தனை செய்த பின்னரே எந்தக் காரியத்திலும் இறங்குவார்கள். எந்த விஷயத்திலும் ஈடுபட்ட பின்னர் மனம் சோர்ந்தோ, தடுமாற்ற மடைந்தோ, முயற்சியைக் கைவிட மாட்டார்கள். இடையூறுகளையும் எதிர்ப்புகளையும், துணிவுடன் எதிர் கொண்டு வெற்றியடைவர்.

வாழ்க்கையில் நாணயமும் கண்டிப்பும், மிகுந்து காணப்படும் இவர்களிடம் அடுத்தவர் அறியக் கூடாத அந்தரங்கம் என்று ஒன்று இருக்காது. தனக்குச் சரி என்று தீர்மானித்ததை வெளிப்படையாகக் கூறுவதினால் விரோதிகளைத் தேடிக்கொள்வார்கள். விரோதிகளிடமும் நட்பு உரிமை பாராட்டி வலிந்து உதவி புரியும் குணத்தினால், இவர்களுக்கு எல்லோரும் நண்பர்களாகவே இருக்கக்காணலாம்.

ஊர் சுற்றுவதில் ஆர்வமும், உதவும் குணமும் உள்ள இவர்களுக்கு எண்ணற்ற நண்பர்கள் உருவாவது இயற்கையே, பலருடன் பழகியபோதும் ஒரு சிலரையே உண்மை நண்பர்களாக ஏற்றுக்கொள்ளுவர்.

கண்ணுக்கு அழகாகத் தோன்றும் எல்லாப் பொருள்களையும் வாங்கிவைத்து வீட்டை அலங்கரிப்பர். வசதிகளைப் பெருக்கிக் கொள்வதற்காகவும், வாழ்கையில் எல்லா இன்பங்களையும் அனுபவிக்க வேண்டும் என்பதற்காகவும், கொஞ்சமும் தயங்காமல் காசையும், நேரத்தையும் செலவு செய்வர்.

பொதுவாக இந்த எண்ணினரில், சோம்பேறிகளாகக் காலம் கழிப்பவர்களைக் காணமுடியாது. இவர்களுடைய சுறுசுறுப்பும், விடா முயற்சியும், செயல் திறமும், இவர்களுக்குப் புகழையும் வெற்றியையும் தேடிக் கொடுக்கும்.

எல்லாம் தெரிந்த போதிலும் ஒன்றும் அறியாதவர் போல அமைதியாக இருப்பர். பணம் சம்பாதிக்கும் நோக்கத்திற்கு மட்டும் எந்தத் தொழிலிலும் பிரவேசிக்க மாட்டார்கள். புகழும் பணமும் இவர்களைத்தானே வந்து அடையும்.

**எண் 1 இன் பலம் குறைந்தோரிடம் காணப்படும் பொதுவான குணங்களில் சில:-**

மற்றவர்கள் தம்மைப் பற்றி உயர்வாக நினைக்க வேண்டும் என்பதற்காக எல்லாம் தெரிந்தவர்கள் போலப் பேசுவார்கள். சிரித்துச் சிரித்துப் பேசி மற்றவர்களையும் சிரிக்க வைத்து மகிழ்ச்சியடைவார்கள். அனேகமாக இவர்களுடைய முயற்சிகள் தோல்வியில் முடியும். வாழ்க்கையில் எதிர்பாராத சிக்கல்களும் தடைகளும் தோன்றியபடி இருக்கும். தம்மால் செய்ய முடியாததையும் செய்து தருவதாக வாக்களிப்பார்கள்.

இவர்களுக்குத் தன்னம்பிக்கை குறைவு. ஆனாலும் மற்றவர்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாகிவிடுவார்கள். அரச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியாலயங்களிலும் கட்டளைகளைக் கவனத்துடனும், பொறுப்புடனும் நிறைவேற்றும் பதவிகளிலும் இவர்களைக் காணலாம்.

சுய காரியக்காரர்கள். தமது இலட்சியங்களைச் சாதித்துக் கொள்ளுவதில் சாமர்த்தியசாலிகளான இவர்கள், மற்றவர்களுக்கு உண்டாகும் இடையூறுகளையோ கஷ்டங்களையோ கவனிக்க மாட்டார்கள். ஆதிக்கம் குறைந்தவர்கள் பெயர் எண்ணை மாற்றுவதன் மூலம் உயரலாம்.

**நண்பர்கள்:-**

எண் 1 இனரின் நண்பர்கள் பெரும்பாலும் 4ம் திகதியில் பிறந்தவர்களாகவோ, எண் 4 இல் பெயர் அமைந்தவர்களாகவோ இருப்பர். இவர்களுடைய வாழ்கையில் எண் 4 அதிகமாகத் தொடர்பு உடையதாக இருக்கக் காணலாம். சில எண் 1 நபர்களுக்கு, 4 எண்ணில் பெயர் அமைந்திருக்கும். 4 எண்ணினருக்கு எண் 1 இல் பெயர் அமைந்திருக்கும். காரணம் எண் 4 (ராகு), எண் 1 இன் (சூரியனின்) சாயல் கிரகம் ஆகும். ஆகையால் இந்த எண்காரருக்குத் தொடர்பு இருந்து கொண்டே இருக்கும்.

இவர்களுக்கு எண் 8 இல் பிறந்தோர், அல்லது இந்த எண்ணில் பெயர் அமைந்தோர், நண்பர்களாக இருப்பார்கள். ஆனால் இவர்களுக்கு (எண் 1 இனருக்கு) 8 எண்காரரால் இடையூறுகள் உண்டாகும் உதவிகளும் இருக்கும்.

**தொழில்:-**

விடாமுயற்சியும் சுறு சுறுப்பும் கொண்ட இவர்களால் எந்தத் தொழிலிலும் சிறப்பாக முன்னேற்றம் காணமுடியும்.

பதிப்பாசிரியர்களாக, (அச்சுத்தொழில்) நூலாசிரியர்களாக (எழுத்தாளர்களாக) சோதிடர்களாகப், புகழுடன் பொருளும் சேர்க்க முடியும். நீதித்துறையும் அரசியல்துறையும், மருத்துவத்துறையும் இவர்களைப் பிரகாசிக்கச் செய்யும். இயல், இசை, நாடகத்துறையும், இவர்களுக்கு ஏற்றவையே.

**மணவாழ்க்கை:-**

இந்த எண்ணுக்குரிய திகதிகளில் பிறந்தோ, அல்லது எண் 1 இன் வரிசையில் பெயர் அமைந்தோ, இருக்கும் ஒருசிலருக்கு மட்டுமே மகிழ்ச்சியான மண வாழ்வு கிடைக்கிறது. இந்த எண் ஆதிக்கரில் பலர் களத்திர பாக்கியம் உள்ளவர்களாகவே காணப்படுகிறார்கள்.

ஆண்கள், அழகும் அன்பும் நிறைந்த வாழ்க்கைத் துணை கிடைத்த போதிலும் சேர்ந்து வாழும் பாக்கியம் குறைந்தே இருக்கும். பதவி, தொழில், கடமை, போன்ற தவிர்க்க முடியாத காரணங்கள் இவர்களைப் பிரித்து வைத்திருப்பதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள், பிடிவாதகுணம், பிறர் சொல் கேட்டு நடத்தல் போன்ற குணங்களால், கணவனுக்கும், தனது குடும்பத்துக்கும் ஆற்றவேண்டிய கடமைகளை அலட்சியம் செய்வதால், மணவாழ்வின் முழு இன்பத்தையும் அனுபவிக்க முடியாமற் போகக் கூடும்.

1, 10, 19, திகதிகளில் பிறந்தவர்கள் (ஆண், பெண்) இருபாலாரும் சூரிய ஆதிக்கம் கூடியவர்கள். ஆகையால் துணிவும் பிடிவாத குணமும் கொண்டவர்கள். இவர்கள் தாம் விரும்பியவரையே திருமணம் செய்து கொள்வர்.

28 திகதி பிறந்தவர்கள் மனவலிமையும் தன்னம்பிக்கையும் குறைந்தவர்கள். காதல் உணர்வு இருந்து காதலித்தாலும், தாம் விரும்பியவரைக் கலியாணம் செய்யத் தயங்குவர்.

இவர்கள் மற்றவர்களின் சொற்களைக் கேட்டு மனம் மாறிவிடுவர். இவர்கள் தன்னம்பிகையை வளர்த்துக் கொண்டால் மிகவும் மகிழ்ச்சியான மண வாழ்வு அமையும். சிலர் மனமும் மாறாமல் மணமும் புரியாமல் வாழ்க்கையைப் பயனற்றதாக்கி விடுவர்.

எண் 1 நபர்பகளுக்கு எண் 1 காரரே இயற்கையாகத் துணையாக அமைவதை அவதானிக்க முடிகிறது. இவர்களுக்குப் பிடிவாத குணமும், சுய எண்ணமும், சுய கௌரவமும், கூடிய நிலையில் இருப்பதால் குடும்பத்தில் சச்சரவுகளும் அமைதியின்மையும் தோன்றியபடி இருக்கும்.

பலம் பொருந்திய 1, 10, 19. திகதிகளில் பிறந்தவர்கள் பலம் குறைந்த 28 திகதி பிறந்தவர்களைத் துணையாகக் கொண்டால் ஓரளவு அமைதியான வாழ்வு உண்டு.

**நோய்கள்:-**

சூரிய ஆதிக்கர், ஆகையால் உஷ்ண சரீரம் உடையவர்கள். இவர்களுக்கு வயிறு. இருதயம், தலை, கண், காது ஆகிய உறுப்புகளில் ஒரு வித வலியோ அல்லது வேறு நோய்களோ தோன்றக் கூடும்.

சிலருக்குச் சமிபாடு சம்பந்தமான தொல்லைகள், இரத்தக் கொதிப்பு (Blood Pressure) இருதயத் துடிப்பு (Heart Palpitation) ஆகியனவும், சிலருக்கு அடிக்கடி தலையிடி, கண் எரிச்சல், கண்களில் நீர்வடிதல், கண் சிவத்தல் ஆகியனவும், பார்வைக் கோளாறும் தோன்றும், இந்த எண்ணினரில் அனேகர் பார்வையைச் சீராக்கக் கண்ணாடி அணிய வேண்டி ஏற்படும்.

**பொருத்தமான திகதிகள்:-**

1, 10, 19, 28, 4, 13, 22, 31 திகதிகளும், திகதி மாதம் வருடம், மூன்றையும் கூட்டினால் 1, 4, வரும் தினங்களும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொருத்தம் அற்ற திகதிகள்:-**

6, 8, 15, 17, 24, 26, திகதிகளும், திகதி மாதம் வருடம், மூன்றையும் கூட்டினால் 6, 8 வரும் தினங்களும்.

**பொருத்தமான நிறம், உடை:-**

மஞ்சள் நிறம் அதிஷ்டத்தையும், பொன் நிறம் அழகையும், பொலிவையும் கொடுக்கும்.

**பொருத்தம் அற்ற நிறம், உடை:-**

நீலமும் கறுப்பும் துரதிஷ்டத்தைக் கொடுக்கும். உடையின் கரையில் கூட இந்த நிறங்கள் இருப்பது தீமையை உண்டாக்கும்.

**பொருத்தமான இரத்தினம்:-**

மாணிக்கம் (Garnet) மஞ்சள் புஷ்பராகம். (Yellow Topaz) இவைகளில் ஒன்றை உடலில் படுமாறு அணிவது நல்லது.

**பொருத்தமான வாகனங்களின் இலக்கம்:-**

கூட்டு இலக்கம் : 1

**பொருத்தம் அற்ற வாகனங்களின் இலக்கம்:-**

கூட்டு எண் : 6, 8

**எண் 1 ஆதிக்கம் பெற்றுப் பிறந்த உலகப் பிரமுகர் சிலர் :-**

| பெயர் | பிறந்த திகதி | எண்கள் | |
|---|---|---|---|
| | | பிறப்பு | கூட்டு |
| லியாகத் அலிகான் (முன் நாள் பாகிஸ்தான் பிரதமர்) | 1-10-1895 | 1 | 7 |
| லெனின் (LENIN) (ரஷ்யத் தலைவர்) | 10-4-1870 | 1 | 3 |
| திருமதி இந்திரா காந்தி (முன் நாள் இந்தியப் பிரதமர்) | 19-11-1917 | 1 | 3 |
| ஷேக் ஹசீனா (பங்களா தேஷ் பிரதமர்) | 28-9-1946 | 1 | 3 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் - 04

## எண் 2- சந்திரன் (Moon)

## தண் ஒளி- மென்மை

அமிர்தம் பொழியும் ஒளியைப் பரப்பும் தன்மை சந்திரனுக்கு உண்டு. அதனால் சுதாகரன் என்ற காரணப் பெயரையும் பெறுகிறான். சந்திரன் சுயப் பிரகாசம் இல்லாதது. மாறும் தன்மை உடையது. வளர்வதும் தேய்வதும் அதன் இயல்பு. சந்திரன் பூமிக்கு அண்மையில் உள்ள கிரகம்.

எண் 1 இன் அதிபதியான சூரியனை ஆண் (ராஜா) என்றும், எண் 2 இன் அதிபதியான சந்திரனை பெண்(ராணி) என்றும் கூறுவது வழக்கம். சூரியனிடம் ஆண்மை, துணிவு, தீவிரம், போன்ற குணங்கள் தலைதூக்கும். சந்திரனிடம் சினேகம், கூட்டுறவு, தாய்மை, யோசனைத் திறன், போன்ற பெண்மைக் குணங்கள் மிளிரும். சூரியனிடம் ஆக்க சக்தியும், சந்திரனிடம் பராபரிப்புச் சக்தியும் உண்டு.

ஆங்கில மாதங்களில் வரும் 2, 11, 20, 29 ஆகிய திகதிகளில் பிறக்கிறவர்கள் சந்திரனின் ஆதிக்கம் பெற்று, எண் 2 காரர் ஆகின்றனர்.

சந்திரன் மனதுக்கு உரிய குணங்களைத் தரும் கிரகம், ஆகையால் 2 எண் காரருக்கு மனஓட்டம் (கற்பனா சக்தி) மிகுதியாக இருக்கும்.

இவர்களுடன் எளிதில் பழகி விடலாம். நட்புக்கு உகந்தவர்களாகவே இருப்பார்கள். ஆனால் எப்போது ஒரே மாதிரியாக இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. மனதை அடிக்கடி மாற்றிக் கொள்ளுவார்கள்.

பெயர் எண் 2 இன் வரிசையில் அமைந்து விட்டால், வேறு எண் காராயினும், இந்த எண்ணின் குணங்கள் படிய ஆரம்பித்து விடும்.

எண் 2 ஆதிக்கர்களை ஓவியம், சிற்பம், சங்கீதம், நடனம், போன்ற கலைத்துறையிலும், துணி, நகை, இரத்தினக்கல் வியாபாரத்துறையிலும், சரித்திர சாஸ்த்திர ஆராய்ச்சித்துறையிலும், கதை கட்டுரை நாடகம், பாடல் புனையும் எழுத்துத்துறையிலும், நீதிபதிகளாக, நியாயவாதிகளாக நீதித்துறையிலும் புகழும் பொருளும் சேர்த்தவர்களாகக் காண முடிகிறது. இவர்களில் ஞானிகளும், மகான்களும் தேசபக்தர்களும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

குறிப்பு:-

ஜுன் 21 முதல் ஜுலை 20 வரையிலான காலப் பகுதியில் பிறந்தவர்களுக்கு மேற்கண்ட பலன்கள் மேலும் சிறப்பாகப் பொருந்தும்.

**எண் 2 இனரின் பொதுவான குணங்கள் :-**

இந்த எண்ணினரில் பெரும்பாலும் (ஆண், பெண்) இருபாலாரும் கவர்ச்சியான தோற்றமும், உடலமைப்பும் கொண்டவர்கள். பூரண சந்திரன் போன்று முகம் வட்டவடிவாக இருக்கும்.

பொதுவாகத் தன்னம்பிக்கை குறைந்தவர்கள். மற்றவர்களை நம்பமாட்டார்கள். சிறிய காரியத்தைக் கூடப் பிறரிடம் ஒப்படைக்கத் தயங்கித் தாமே செய்து விடவேண்டும் என்ற முடிவுக்கு வந்து விடுவார்கள்.

இவர்களுக்குப் புதிய புதிய எண்ணங்களும், திட்டங்களும் மனதில் தோன்றியபடி இருக்கும். சோம்பல் குணத்தினால் எதையும் செய்து முடிக்கும் ஆற்றல் அற்றவர்களாகவே இருப்பர்.

சிலரிடம் எல்லாந் திறமைகளும் இருந்தும், சோம்பல் காரணமாக எந்த முயற்சியிலும் ஈடுபடாமல் காரியங்களைத் தவணை போட்டுக் கொண்டு காலம் கழிப்பர். காரணம் கேட்டால் “அது இப்படி முடிந்து விடுமோ” அப்படி முடிந்து விடுமோ? என்று கவலைப்படுவர்.

தர்க்கம் புரிவது இவர்களுக்கு மிகவும் பிடித்தமான பொழுது போக்கு. வாதப்பிரதி வாதங்கள் பல நோக்கங்களையும், குறிக்கோளையும். கருத்துக்களையும் கொண்டவையாக இருக்கும்.

2 எண்ணினரில் சிலர் நல்லவர்கள், உருவில் அழகான வர்கள் எதிலும் திறமையுள்ளவர்கள். எந்த விஷயத்தைப் பற்றியும் சிறப்பாகத் தர்க்கம் புரியும் தன்மை கொண்டவர்கள். இறைபக்தி மிகுந்தவர்கள், தத்துவம் பேசுவதில் ஈடு இணையற்றவர்கள், இவ்வளவும் இருந்தும் இவர்கள் எந்தக் காரியத்திலும் துணிந்து இறங்கமாட்டார்கள். எதையும் செய்யத் தயங்குவார்கள். காரணம் தன்னம்பிக்கை இன்மைதான்.

இத்தகையோர் எதற்கும் அடுத்தவர் துணையையே நாடுவர். கூட்டுத் தொழிலில் நாட்டம் இருக்கும். இப்படித் தன் நம்பிக்கை குறைந்தவர்கள், பொறுப்புகள் கூடிய பதவிகள், இவர்களைத் தேடி வந்தாலும் வேண்டாம் என்றும் மறுத்து விடுவார்.

சில சமயங்களில் மனத்தைரியம் நிறைந்தவர்களாவும், உற்சாகம் மிகுந்தோராகவும், தன் நம்பிக்கை கொண்டவர்களாகவும், காணப்படுவர், மறு கணம் துணிவு மறைந்து கோழையாகிவிடுவர், உற்சாகம்

நூலக சேவை
யாழ்ப்பாணம்



KOHA JPL
127052
5087cc
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குறைந்து சோர்ந்து விடுவார். எந்தக் காரியத்தையும் தொடராது, புதுத் தொழில் எதையும் தொடங்காது, விட்டு விடுவர். காரணம் தன்னம்பிக்கையும், உறுதியான கொள்கையும், குறையாத தைரியமும் இல்லாமையே.

"உங்கள் காரியங்களைச் செய்யாது நல்ல பொழுதை ஏன் வீணே கழிக்கிறீர்கள்" என்று கேட்டால் "சந்தர்ப்பமும் சூழ்நிலையும் சரி வர வேண்டும். காலமும் நேரமும் ஒத்துப்போக வேணடும்" என்று அலுத்துக் கொள்ளுவார்கள்.

இந்த எண் இங்கிதமான சந்திரனைக் குறிக்கிறது. சந்திரன் அழகுணர்ச்சியும், அபார கற்பனைத் திறமும், காதல் நினைவு களையும் அளிப்பவர். மதுவும் மங்கையுமே வாழ்க்கை என்று காலம் போக்கும் சிலரும் இந்த எண்ணினரில் உண்டு.

சிலர் எவருக்கும் பணிய மறுப்பர். அடுத்தவர் பேச்சை அலட்சியம் செய்து எதிர்ப்பர். இவர்களுடைய பொல்லாத குணத்தினால் எல்லோரையும் வெறுப்பர். ஊரைப் பகைப்பர். இவர்களுக்கு வழக்கும், கோட்டுவாசலும், பழக்கப்பட்டுவிடும். காலமெல்லாம் கோடு, கச்சேரி என்று புலம்பிக் கொண்டு காசை வீணாக்கி, சொத்துக்களை விற்று இறுதியில் ஆண்டியாகி விடுவர்.

சிலருக்குத் துன்பங்கள் எதிர் பாலாரால் உண்டாகும். ஆண்களாயின் மனைவியால், காதலியால், உடன் பிறந்த சகோதரியால், மற்றும் பெண்களால், பெண்களாயின் எதிர் தரப்பைச் சார்ந்த ஆண்களால் துன்பங்கள் உண்டாகும்.

சிலர் கடைசிவரை நல்லவர்களாவே வாழ்வார்கள். எண் 2 இன் ஆதிக்கம் சிறந்த முறையில் அமைந்தவர்கள். சாந்த குணம் நிறைந்து பொறுமை, திறமை, முதலாய சிறந்த குணங்களுடன், மகிழ்ச்சியுடன் நல்லவர்களாக வாழ்வார்கள். ஆதிக்கம் சிறந்த முறையில் அமையாதவர்கள் பொறுமையின்மை, பிடிவாதம், கடுமையான சொல், மற்றவர்களைப் பயமுறுத்தல் போன்ற தீயகுணங்களால் ஆளப்படுவார்கள்.

மற்றவர்களுக்கு யோசனை கூறும் இவர்கள் தாமே ஒரு காரியத்தைச் செய்ய நேர்ந்தால் மனம் குழம்புவர். கதிரவனிடமிருந்து ஒளியைப் பெறும் வெண்மதி போன்று, 2 எண்காரர் அவ்வப்போது எவருடன் கூடினாரோ, அவருடைய மனோ பாவங்களையும், தன்மைகளையும் பிரதிபலிப்பர். கண்ணாடி போன்றவர்கள்.

சோம்பல் குணம் உடையவர்கள் ஆகையால் புதுக் காரியங்கள் எதிலும் ஈடுபடும் குணம் இராது. தமது காரியங்களை யாராவது முடித்துத்தர மாட்டார்களா? என்று காத்திருப்பார்கள். ஆனால் தினசரி நடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைக் காரியங்களை, அதிகாரி அல்லது மேலாள் இட்ட வேலையை, ஒருவருடன் சேர்ந்து செய்யும் செயல், ஆகியவற்றை ஒழுங்காகச் செய்து விடுவார்கள்.

அதிகாரம் உள்ள பொறுப்பு வகிக்கவோ, புதிதாகத் தொடங்கவோ இவர்களால் முடியாது. ஒரு மரத்தைச் சுற்றி வளர்ந்து படரும் கொடிபோல் பிறர் தயவை நாடி இயங்குவார்கள்.

தன் நம்பிக்கையும், திட சித்தத்தையும் வளர்த்துக் கொண்டு உறுதியான தெளிந்த மனதுடன் கருமமாற்றத் தொடங்கினால் எந்தக் காரியத்தையும் செய்து முடிக்கும் திறமை இவர்களுக்கு வந்து விடும். இதற்கு சுய சிந்தையும், உற்சாக மூட்டும் உற்றவரும் அவசியம். சுய பிரகாசம் இல்லாத சந்தரனுக்கு சூரியன் போன்று இவர்களுக்கும் ஒரு உந்து சக்தி தேவை. தைரிய மூட்டவும் துணிந்து ஒரு காரியத்தில் ஈடுபடும்படி செய்யவும், வேறு துணையும் தூண்டுதலும் இவர்களுக்கு அவசியம்.

**நண்பர்கள்:-**

இவர்களுடைய சந்தேக சுபாவமும், எடுத்தெறிந்து பேசும் பேச்சும், இவர்களுக்கு உண்மையான நண்பர்களை ஏற்படுத்தாது. மற்றவர்களுடன் சேர்ந்து வாழவும் விடாது.

எண் 7 (கேது) எண் 2 இன் (சந்திரனின்) சாயல்கிரகம், எனவே 7 எண்ணினர் இவர்களுடன் நெருங்கிப்பழகுவர். 3, 4 எண்ணினரும் இவர்களுக்கு உதவுவர்.

எண் 1 நபர்களும் எண் 2 நபர்களும் நேர் மாறான குணங்கள் உடையவர்கள் என்றாலும், ஒருவருடன் ஒருவர் இணைந்து செயல் படக் கூடியவர்கள். எண் 2 இனருடன் இவர்கள் கொள்ளும் நட்பு நிலைப்பதில்லை.

**தொழில் :-**

துணிவுடனும் நம்பிக்கையுடனும் எந்தத் தொழிலில் ஈடபட்டாலும் இவர்கள் வெற்றி பெறுவது நிச்சயம். துணி வியாபாரம், நகைவியாபாரம், அலங்காரப் பொருள் (Fancy Goods) வியாபாரம், பால் பண்ணை ஆகிய தொழில்கள் இலாபகரமாக நடைபெறும். திரவ மருந்து. பெயின்ற் விற்பனையும் இவர்களுக்கு ஏற்றதே. புகைப்படத் தொழில் இவர்களுடைய கற்பனா சக்திக்கு உதவுவதுடன், பண வருவாயையும் ஏற்படுத்தும். கடல் கடந்த வாணிபம் (ஏற்றுமதி இறக்குமதி) இவர்களுக்குப் பொருத்தமானது.

எந்தக் கட்சிக்காவும் வாதாடும் வலிவும் துணிவும் உள்ள சிலரால் சிறந்த நியாயவாதிகளாகப் பிரகாசிக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணவாழ்க்கை:-**

இவர்களுக்கு வாழ்க்கைப் பருவம் ஆரம்பமானதும் பொருத்தமான திருமணம் நடந்தால் மனம் ஒத்த மண வாழ்க்கை அமையும். இருவரின் எண்களும் ஒன்றிற் கொன்று பொருந்தி அதிஷ்டம் பெற்றிருந்தால் 2 எண்ணினர், இறை அருளும், நிறை பொருளும், பெற்று அமைதியுடன் வாழ்வார்கள்.

ஒரு சமயம் எண்கள் பொருத்தம் இன்றி இருப்பதை உணர்ந்தால், இவர்கள் தங்கள் பெயர்களைப் பொருத்தமான எண்களுக்கு மாற்றி அமைத்து அந்த எண்களின் சக்திகளை வளர்த்துக் கொண்டால் குடும்பத்தில் பிடிப்பும், கவர்ச்சியும், மிகுந்து. கருத் தொருமித்த தம்பதிகளாக வாழ முடியும்.

இந்த எண்ணில் பிறந்த அனேகர் (ஆண்களும் பெண்களும்) பொருத்தம் இல்லாத எண்ணினரை மணந்து பெருத்த சண்டை போடுபவர்களாவும், துன்பத்தை அனுபவிப்பவர்களாவும் காணப்படுகின்றனர்.

இந்த எண்ணினர் பொதுவாகத் தன்னம்பிக்கை, பொறுமை, பரந்த மனப்பான்மை, ஆழ்ந்த சிந்தனை ஆத்மஞானம், சகிப்புத்தன்மை போன்ற, வாழ்க்கைக்கு மிக அவசியமான குணங்கள் குறைந்தவர்கள். எனவே இவர்கள் இந்தச் குணங்களை வளர்த்துக் கொண்டால் மண வாழ்க்கை மணம் வீசும் மலர்ச் சோலையாகிவிடும்.

**நோய்கள்:-**

சந்திர ஆதிக்கம் உடையவர்கள், ஆகையால் இவர்களுடைய சரீரம் மாறும் இயல்புடைதாகவே இருக்கும். சரீரத்தில் உஷ்ணம் மிகுந்த போது இளைத்தும், பிறசமயங்களில் (குளிர்ச்சி கூடியபோது) பருத்தும் காணப்படுவர். குழந்தைப் பருவத்தில் உஷ்ண வாயு, வயிற்றுப் போக்கு, மூளை (நரம்பு) சம்பந்தமான நோய்களும், வயது ஏற ஏற சமிபாட்டு உறுப்புகள், மூத்திரக் காய் சம்பந்தமான நோய்களும் ஏற்படும்.

ஜீரணக் கோளாறு, நீரிழிவு, கபம், ஆகியனவே இவர் களுடைய பிரதான நோய்கள். இந்த நோய் இவர்களைப் பீடிப்பதற்கு முக்கிய காரணமாக அமைவது, இவர்களுடைய சோம்பல் குணமும், அதிக உடல் உழைப்பு இன்றிக் காலம் கழிக்கும் பழக்கமுமே.

சிலருக்குக் கண் சம்பந்தமான நோய்களும் (நீர்வடிதல் எரிச்சல்) நரம்புப் பலவீனம், கை, கால், நடுக்கம், வாதப்பிடிப்பு, பித்தம், தலைக் கிறுகிறுப்பு, வயிற்றுவலி ஆகியனவும், பல், பல் ஈறு சம்பந்தமான உபாதைகளும் அடிக்கடி தோன்றித் தொல்லை கொடுத்தபடி இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொருத்தமான திகதிகள்:-**

1, 10, 19, 28, 7, 16, 25, 2, 11, 20, 29, ஆகிய திகதிகளும், திகதி மாதம், வருடம், மூன்றையும் கூட்டினால் 1. 7, 2 வரும் தினங்களும்.

**பொருத்தம் அற்ற திகதிகள்:-**

8, 9, 17, 18. 26, 27 ஆகிய திகதிகளும், திகதி மாதம் வருடம், மூன்றையும் கூட்டினால் 8, 9 வரும் தினங்களும்.

**பொருத்தமான நிறம், உடை:-**

பச்சை, இலேசான பச்சை, ஆகியன, உற்சாகத்தையும் அமைதியையும் கொடுக்கும், வெள்ளை நன்மை உண்டாக்கும்.

**பொருத்தம் அற்ற நிறம், உடை:-**

கறுப்பு, சிவப்பு, நீலம், இவை தீமை விளைவிக்கும்.

**பொருத்தமான இரத்தினம்:-**

முத்து (Pearl) வைடூரிம் (Cats' Eye)

**பொருத்தமான வாகனங்கள்:-**

கூட்டு இலக்கம் : 7, 2, 1

**பொருத்தம் அற்ற வாகனங்கள்:-**

கூட்டு இலக்கம் : 9

**எண் 2 ஆதிக்கம் பெற்றுப் பிறந்த உலகப் பிரமுகர் சிலர் :-**

| பெயர் | பிறந்த திகதி | எண்கள் | |
|---|---|---|---|
| | | பிறப்பு | கூட்டு |
| எம். கே காந்தி (மாகத்மா காந்தி) | 02. 10. 1869 | 2 | 9 |
| தனி நாயகம் அடிகள் | 02. 08. 1913 | 2 | 6 |
| சுப்பிர மணிய பாரதி | 11. 12. 1882 | 2 | 6 |
| தோமஸ் அல்வா எடிசன் (மின் சாரக் கருவிகள் கண்டு பிடித்தவர்) | 11. 02. 1847 | 2 | 6 |
| அடோல்வ் ஹிற்லர் (ஜேர்மனி) | 20. 04. 1889 | 2 | 5 |
| ராஜீவ் காந்தி | 20. 08. 1944 | 2 | 1 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் - 05

## எண் 3 குரு (JUPITER)

### ஞானம் – போதனை

குண விசேடத்தாலும், அறிவாலும் உயர்ந்தவர் வியாழ பகவான். அறிவின் திறமையால் பிறருக்கு உபதேசம் செய்து, பணிய வைத்து, நல் வழி காட்டுவது இவருடைய இயல்பு. இவரைக் குரு என்றே சோதிட நூல்கள் குறிப்பிடுகின்றன.

ஆங்கில மாதங்களில் வரும் 3, 12, 21, 30 ஆகிய திகதிகளில் பிறக்கிறவர்கள் எண் 3 இன் ஆதிக்கம் பெற்றுக் குரு என்னும் கிரகத்தால் ஆளப்படுகிறார்கள்.

இவர்கள் மிகவும் ஊக்கம் உடையவர்களாகவும், உயர்ந்த இலட்சியம் கொண்டவர்களாகவும், கடமையில் கருத்து நிறைந்தவர்களாகவும், இருப்பார்கள். எந்தக் காரியத்தில் ஈடுபட்டாலும் அதில் வெற்றி பெறுவதற்கான் வழிமுறைகளை ஒழுங்காக வகுத்து, முழுக் கவனத்தையும் செலுத்தி முன்னேறுவார்கள்.

சுய கௌரவத்திற்கும், பெருந்தன்மைக்கும், பொருந்தாத எந்தக் காரியத்திலும் ஈடுபடமாட்டார்கள். கீழ்த் தரமான செயல்களையும், அதிகாரம் இல்லாத பதவிகளையும் வெறுப்பவர்கள். தூய்மையான எண்ணங் கொண்ட இவர்கள் பிறருக்கு உதவி செய்ய விரும்புவார்கள். பழிச் சொல் வரா வண்ணம் நடப்பவர்கள்.

எவருக்கும் தீங்கு செய்யத் துணிய மாட்டார்கள். 3 எண் காரரையும் 1 எண் காரரையும் மனித குலத்துக்கு உதவ வந்த தெய்வப் பிறவிகள் என்று சொல்லலாம், எண் 1 காரர் போன்று ஆத்திரமும் முன் கோபமும் இவர்களுக்கு இருக்காது, ஆனால் கர்வம் உடையவர் களாகவே இருப்பார்கள். பிறர் தனக்குப் பணிந்து நடக்க வேண்டும் என்று விரும்புவார்கள். சிலர் கர்வம் உடையவர்கள் போல் தோற்றமளிப்பார்கள்.

எண் 1 இனரைப் போன்று 3 எண் ஆதிக்கர் அதிகார ஆசையும், சுய முன்னேற்றத்தில் விருப்பமும் உடையவர்களாக இருப்பார் கள். எந்தத் துறையிலும் தலைமைப் பதவியைக் குறியாகக் கொண்டவர்கள். அதிகாரம் செய்யும் ஆற்றல் உள்ள இவர்களுக்குத் தன்னிலும் மேலானவர் களுக்கு அடங்கிப் போகும் குணமும், இயற்கையாகவே பொருந்தியிருக்கும், பெரும்பாலும் இவர்கள் பெரிய பதவிகளில் இருப்பார்கள். அதிகாரம் உடைய பதவிகள் இவர்களுடைய விருப்பத்திற்கு உரியவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறர் நலம் பேணும் பண்பும், தமக்கு நியாயம் என்று தோன்றும் எதையும் தயங்காமல் செய்யும் குணமும், இவர்களுடன் பிறந்தவை. எந்த மதத்தைச் சார்ந்தவராயினும் அந்தமதக் கொள்கையிலும் ஆசார நியமங்களிலும் மிகவும் பிடிப்புக் கொண்டவர்ளாகவே காணப்படுவர். பழைமை யில் ஆழ்ந்த பற்று மிகுந்த இவர்கள் புதுமையையும் நாகரீக பழக்க வழக்கங்களையும் முழுமையாக ஏற்றுக் கொள்ள மாட்டர்கள்.

3 எண்ணினரில் சிலர் இளவயதில் தந்தையையோ தாயையோ இழந்து விடுகின்றனர். இல்லையேல் ஏதோ ஒரு காரணத்தினால் பிரிந்து வாழ்கின்றதை அவதானிக்க முடியும்.

**குறிப்பு** :

பெப்பிரவரி 21 முதல் மார்ச் 20 வரையிலான காலப் பகுதியிலோ அல்லது நவம்பர் 21 முதல் டிசம்பர் 20 வரையிலான காலப்பகுதியிலோ பிறந்தவர்களுக்கு மேலே கூறப்படுட்டுள்ள குணங்கள் பொருத்தமாக அமையும்.

## எண் 3 இன் ஆதிக்கரை மூன்று வகையினராகப் பிரிக்கலாம்

### எண் 3 இன் பூரண ஆதிக்கர்கள்

இவர்கள் அன்பிலும், பண்பிலும், பக்தியிலும், ஆற்றலிலும், சிறந்தவர்கள். சிறு வயதிலிருந்தே ஏதாவது ஒரு துறையில் புகழ் பெறவேண்டும் என்று துடிப்பார்கள். இவர்கள் படிப்பறிவும், குறிப்பறிவும் நிறைந்த குணக் குன்றுகள். கலையார்வமும், தன்னம்பிக்கையும், விடா முயற்சியும் உடையவர்கள்.

இவர்களில் சிலரை பக்திமான்களாகவும், மதகுருமாராக வும், தர்ம கர்த்தாக்களாகவும், மக்களுக்காக வாழும் ஆர்வம் மிகுந்த தியாகிகளாகவும், கலைஞர்களாகவும், அறிஞர்களாகவும் அரசியல் மேதை களாகவும், புகழ்பெற்ற எழுத்தாளர்களாகவும், சோதிட வல்லுனர்களாகவும் காணமுடியும்.

சிலர் பொறியியலாளர்களாகவும் (Engineers) மருத்துவர் களாகவும் (Doctors) விஞ்ஞானிகளாகவும் (Scientists) வழக்கறிஞர்களாவும் (Lawyers) நூலாசிரியர்களாவும் (Authors) பேராசிரியர்களாகவும் (Professors) புகழுடன் விளங்குகின்றனர்.

சமூக சேவையில் புகழுடன் உயர்ந்து நிற்பவர்கள், ஒழுக்கமும் நேர்மையும் நிறைந்த தொழிலதிபர்கள். கட்டுப்பாடுகள் நிறைந்த கப்பல் விமானப்படைத் தளபதிகள் ஆகியோரும் உளர்.

பூரண ஆதிக்கரில் சிலர், உலக இன்பங்களை வெறுத்து மகான்களாவும் ஞானிகளாகவும் மாறிப், பேரின்ப வாழ்வை அனுபவிக்கும் துறவிகளாகி விடுவதும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எண் 3 இன் பலம் குறைந்தோர் :-**

கூர்மையான அறிவும் உழைக்கும் திறமையும் இவர்களுக்கு இயற்கையாகவே அமைந்திருக்கும். தமது பொறுப்புகளை உணர்ந்து யாவரும் மதிக்கும் படி நடந்து கொள்வர்.

குடும்ப கௌரவம், தேச கௌரவம், ஆகியவற்றை அக்கறையுடன் பாதுகாத்துக் கொள்வர். இவர்களில் அனேகர் குடும்பத்தின் மேல் கொண்ட பற்றினாலும் கடமை உணர்வினாலும், இளம் பருவத்திலேயே குடும்ப பாரத்தைச் சுமக்க வேண்டியவர்களாகின்றனர்.

இந்தச் சுமை இவர்களைத் தாம் விரும்பியபடி நடந்து, முன்னேற எடுக்கும் முயற்சிகளைத் தடுத்து விடும். புகழும் பதவியும் இவர்களுக்குக் கானல் நீராகிவிடும். தன்னைச் சார்ந்தவர்களுக்கு உழைப்பதே குறிக்கோளாகி விடும். இந்த மாதிரியான தறுக்கணிப்பு, இவர்களைத் தன்னம்பிக்கை குறைந்தவர்களாக்கிவிடும்.

இவர்களே உலக இயக்கத்திற்கு வேண்டிய முக்கிய தொழில்களிலும் பதவிகளிலும் ஈடுபடுகிறார்கள், அரச காரியாலயங்களிலும் தனியார் நிறுவனங்களிலும், இலிகிதர்களாகவும் குறைந்த பொறுப்புகள் உள்ள பதவிகளிலும் இவர்களைக் காணலாம்.

சிறந்தபள்ளி ஆசிரியர்களும், வங்கிகளில் கடமைபுரியும் கண்ணியம் நிறைந்தவர்களும் இவர்களில் இருக்கின்றனர். சொந்த வேலைகளை விட்டுத் தமக்கு இலாபம் எதுவும் அளிக்காத பொதுக்காரியங்களில், ஈடுபாடு கொண்டவர்களும் இந்த வகையினரில் உண்டு.

**எண் 3 இன் பலம் தாழ்ந்த நிலையில் உள்ளோர் :-**

இவர்கள் இந்த எண்ணில் பிறந்தும் அதிஷ்டம் இல்லாத அபாக்கியசாலிகள். ஆரம்பத்தில் அதிஷ்டசாலிகள் போல வாழ்ந்தாலும் அதிஷ்ட ஒளி சிறிது சிறிதாக மங்கி மறைந்து விடும். இவர்களுக்கு அதிஷ்ட எண்ணில் பெயர் வைத்தாலும் பயன் இல்லாது வாழ்ந்திடுவர்.

மிகவும் சோம்பேறிகளாக காணப்படுவர். ஆடம்பரப் பிரியர்களாகவும், மித மிஞ்சிய செலவாளிகளாகவும் இருப்பர். தவறான நடவடிக்கைளும் சூதாட்டத்தில் விருப்பமும் தோன்றும். விபரீத, சிந்தனைகள் முளைக்கும். மனம் புலன்களுக்கு அடிமைப்பட்டு அலையும். எதிர்பாராத விபத்துகள் உயிர் ஆபத்துகள், உடல் ஊன மடைதல், ஊர்ப்பகை, இடர்கள், எதிர்ப்புகள், வாழ்கையில் ஏமாற்றம், ஆகியன ஏற்படும். வாழ்க்கை வேப்பங்காய் ஆகிவிடும்.

எந்தத் தொழிலைச் செய்தாலும் சித்தியாகாது. பல துன்பங்களை அனுபவித்த பின்னர், தங்களை உணர்ந்து. தெய்வத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தியை அறிந்து தெளிந்து, அருள் பெற்று அதிஷ்டசாலிகளாக வாழ்வார்கள். குரு பகவான் கருணை கொண்டு இவர்களுக்குத் தெய்வ பலத்தை உணரச் செய்வார்.

**நண்பர்கள் :-**

இயற்கையாகவே தனிமையை அதிகம் விரும்புவர்கள். ஏகாந்த வாசம் இவர்களுக்குத் தத்துவ சிந்தனைகள் வளர உதவுகிறது. எந்த எண்ணினருடனும் அன்புடன் பழகும் பண்பு கொண்ட இவர்களுக்கு, எண் 3, 9 எண்ணினரும், இந்த எண்களின் வரிசையில். பெயர் அமைந்தோரும் நண்பர்களாக இருப்பர்.

எண் 5 அல்லது 6 இல் பிறந்தவர்களும் பெயர் அமைந்தவர்களும் இவர்களுடன் கொள்ளும் நட்பு நிலையானதாக இருக்காது. வாழ்வு இயலில் 1 எண்காரரர் இவர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருப்பதை அறிய முடிகிறது.

**மணவாழ்க்கை:-**

இந்த எண்ணினரில் பெரும்பாலானோர் மனதிற்குப் பிடித்த அன்பும், பண்பும் கொண்டவர்களையே துணையாக அடைகின்றனர். இவர்களுடைய வாழ்வு மகிழ்ச்சிகரமாக அமையும்.

சில ஆண்களுக்கு மட்டும் இல்லற வாழ்க்கை இனிமையாக அமைவதில்லை. இதற்கு அவர்களுடைய மனைவியரின் அன்பு இன்மையும், அலட்சியப் போக்கும், பிடிவாத குணமும், செயல்களும் ஆணவ எண்ணத்தினால் ஏற்படும் பணிவின்மையுமே காரணமாகிறது.

இவர்களில் சிலருக்கு மனைவியாக வரும் பெண்கள் நாளடைவில் பல்வேறு நோய்களால் பீடிக்கப்படுகின்றர். இதனால் குடும்பத்தில் அமைதியின்மையும் துன்பங்களும் தொடரும்.

3 எண்ணினருக்கு எண் 1 இல் பிறந்தோரோ, பெயர் அமைந்தோரோ வாழ்க்கைத் துணையாக அமைவதை அவதானிக்க முடிகிறது.

**நோய்கள்:-**

இந்த எண்ணின் ஆதிக்கம் பெற்ற அனேகருக்குத் தோல் சம்பந்தமான சாதாரண நோய்களும், நாக்கு தொண்டைப் பகுதிகளில் புண், கை, கால் பிடிப்பு, போன்ற நரம்புகள் தொடர்பான நோய்களும் காணக்கூடும்.

சிலருக்கு பெரும்பாலும் 39 அல்லது 48 வயதிற்கு மேல் எக்ஸிமா (Eczema) என்று சொல்லப்படுகிற தோல்வியாதி தோன்றக்கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களில் அனேகரை மூலநோய், வயிற்றுவலி, மலச்சிக்கல், வாதம் போன்ற நோய்கள் துன்புறுத்தும்.

**தொழில் :-**

அதிகாரமும் பொறுப்பும் உள்ள பதவிகளில் சிறப்பாகச் செயலாற்றுவார்கள். சுயதொழில் ஆரம்பித்துப் பணம் சேர்க்கும் அவா இவர்களுக்கு உண்டாவதில்லை.

எண் 3 இன் அதிபதியான குரு பரம சுபக்கிரகம். ஆழ்ந்து யோசிக்கும் போது 3 எண் நபர்கள் ஏராளமான செல்வமும் நன்மையும் பெறும் வாய்ப்பு உள்ளவர்கள் என்ற முடிவுக்கு வருவது இயற்கையே. ஆனால் அனுபவத்தில் அப்படியாக இல்லை. கலப்பு இல்லாத சுகத்தை, 3 ஒரு போதும் வழங்குவது இல்லை. 3ம் எண்ணினர் பொருளும் சுகமும் அதிகம் பெறமாட்டார்கள்.

இவர்களுக்குப் புத்தி மேன்மை, கல்வியறிவு, ஞானம், ஆன்மவிசாரம் போன்றவை பெருகியிருக்கும். பெரும் பதவிகளில் கௌரவமும் புகழும் பெற்று மதிப்புடன் வாழ்வார்கள்.

இவர்கள் விவேகமும் தத்துவஞானமும் நிறைந்தவர்கள். நிலையற்ற பொருள் செல்வத்தில் பற்று வைப்பதில்லை.

**பொருத்தமான திகதிகள்:-**

3, 9, 12, 18, 21, 30, ஆகிய திகதிகளும், திகதி மாதம் வருடம், மூன்றையும் கூட்டினால் 3, 9 வரும் தினங்களும்.

**பொருத்தம் அற்ற திகதிகள்:-**

5, 6, 14, 15, 23, 24 ஆகிய திகதிகளும், திகதி மாதம் வருடம், மூன்றையும் கூட்டினால் 5, 6 வரும் தினங்களும்.

**பொருத்தமான நிறம், உடை:-**

தாமரைப் பூவின் நிறம் மிகவும் நன்மை செய்யக் கூடியது. இலேசான மஞ்சள், இலேசான சிவப்பு, (Light yellow, Light Red) கத்திரிப்பூ நிறம் (Purple).

**பொருத்தம் அற்ற நிறம், உடை:-**

கறுப்பு கருநீலம் (Dark Blue)

**பொருத்தமான இரத்தினம்:-**

- புஷ்பராகம் (Topaz), செவ்வந்திக் கல் (Amethyst)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொருத்தமான வாகனம்:-**

கூட்டு இலக்கம் : 3, 9.

**பொருத்தம் அற்ற வாகனம்:-**

கூட்டு இலக்கம் : 5, 6.

**எண் 3 இன் ஆத்திக்கம் பெற்றுப் பிறந்த உலகப் பிரமுகர் சிலர்.**

| பெயர் | பிறந்த திகதி | எண்கள் | |
|---|---|---|---|
| | | கூட்டு | பிறப்பு |
| டொக்ரர் ராஜேந்திர பிரசாத் (முன் நாள் இந்திய ஜனாதிபதி) | 03- 12- 1884 | 3 | 9 |
| அலெக்சாந்தர் கிரம் பெல் (ரெலிபோனைக் கண்டுபிடித்தவர்) | 03- 03- 1847 | 3 | 8 |
| சேர் அந்தனி ஈடன் (முன் நாள் பிரிட்டிஷ் பிரதமர்) | 12- 06- 1897 | 3 | 7 |
| சுவாமி விவேகானந்தா | 12- 01- 1863 | 3 | 4 |
| ஜோசப் ஸ்ராலின் (ரஷ்ய அதிபர்) | 21- 12- 1879 | 3 | 4 |
| ஹென்றி போட் (அமெரிக்க தொழில் அதிபர்) | 30- 06- 1863 | 3 | 9 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
127052

# அத்தியாயம் - 06

## எண் 4 இராகு (Urenus)

### வாக்கு – பகைமை

எண் 4 இராகுவைக் குறிக்கும். இராகு சூரியனின் சாயல் கிரகம் என்று கருதப்படுகிறது. இந்த எண் ஆராய்ந்து அறியும் சக்தியைக் கொடுப்பதால், புத்தியை ஆளுவதாக அமைந்துள்ளது.

ஆங்கில மாதங்களில் வரும் 4, 13, 22 ,31 ஆகிய திகதிகளில் பிறக்கிறவர்கள் இந்த எண்ணால் ஆளப்படுகிறவர்கள் ஆகிறார்கள்.

இந்த எண்ணினர் பிடிவாத குணம் உள்ளவர்கள். கஷ்டப் பட்டு வாதாடுவதில் சளைக்க மாட்டார்கள். அதிலும் கூட, ஒரு ஒழுங்கு முறைகளைக் கடைப் பிடிக்காமல் "அது அப்படித்தான். இது இப்படித்தான்" என்று கண்டிப்போடு சொல்லி முடிப்பார்கள். எதிர்ப்புகளை உண்டாக்கும் குணம் இவர்களுக்குச் சிறிதும் இருக்காது. ஆனால் இவர்களுடைய பிடிவாதகுணம், மாறுபட்ட அபிப்பிராயங்கள், சுதந்திர உணர்வு போன்றவை எதிர்ப்புகளை உண்டாக்குகின்றன. விரோதிகள் தோன்றியபடி இருப்பார்கள்.

பிரயாணங்களில் பிரியமும் அதனால் நன்மைகளும் உண்டாகும். நான்கு திசையும் போய் வந்தவர், நாலும் அறிந்தவர், நாலு பேருக்குத் தெரிந்தவர், என்று மக்கள் இவர்களுக்குப் புகழ் மாலை சூட்டுவர்.

கட்டுப்பாடுகளையும் சம்பிரதாயங்களையும் எதிர்ப்பது இவர்களுடைய பிறவிக்குணம். சமூகத்திலும் அரசியலிலும் மாற்றங்கள் செய்ய வேண்டும் என்ற தீவிர எண்ணம் மனதில் இருந்து கொண்டே இருக்கும். சந்தர்ப்பம் கிடைத்தால் செயலிலும் காட்ட முயற்சி எடுப்பார்கள்.

அரசியல் அமைப்பு, சட்டதிட்டங்கள் ஏற்படுத்தல், சீர்திருத்தம், இவைகளுக்கெல்லாம் இந்த எண்ணினரே சிருட்டி கர்த்தாக்கள். பூரண சுதந்திரப் பிரியர்களான இவர்களே சமுதாயாத்தின் அத்திவாரம்.

இந்த எண்ணில் பிறந்தோர் கணித மேதைகளாவும் அரசியல் தலைவர்களாவும், மேடைப் பேச்சாளர்களாகவும், கவிஞர்களாகவும், திரைப்பட நாடக நடிகர்களாகவும். நூலாசிரியர்களாவும், பொறியியலாளர் களாகவும் விளங்குகின்றனர்.

**குறிப்பு:**

ஜுன் 21 முதல் ஜுலை 20 வரையுள்ள சந்திரனின் ஆதிக்க காலத்தில் அல்லது ஜுலை 21 முதல் ஓகஸ்ட் 20 வரையள்ள சூரியனின் ஆதிக்க காலத்தில் பிறந்தவர்களுக்கு மேலே கூறப்பட்டுள்ள குணங்களும் பலன்களும் சிறப்பாகப் பொருந்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சில பொதுவான குணங்கள்:-**

4 எண்ணினரில் சிலர் மிகவும் வாக்கு வன்மை நிறைந்தவர்களாகக் காணப்படுவர். பேச்சு மூலமும், எழுத்து மூலமும், சமூகச் சீர் திருத்தங்கள் செய்யத் துடித்துக் கொண்டிருப்பர். சிலர் பேசும் போது கடுமை தொனிக்கும் இனிமை இராது. மிடுக்காகவே அபிப்பிராயங்களை வெளியிடுவர். மற்றவர்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பளிக்கமாட்டார்கள்.

எப்பொழுதும் ஓய்வு இன்றி எதையாவது யோசித்துக் கொண்டிருப்பார்கள். மனதில் அமைதி இருக்காது. நினைத்தது எதிர்பார்த்தபடி நடக்கவில்லை என்றால் தனிமையை நாடித்துன்பம் அடைவர். இந்த எண்ணினரில் பெரும்பாலானோர் பருத்த சரீர அமைப்புக் கொண்டவர்கள்.

சமயோசித புத்தியும், தன்னம்பிக்கையும், உள்ளவர்கள். ஆனால் மன அமைதி இன்றி அல்லல் படுவர். வாழ்வில் இவர்களுக்கு ஏதாவது ஒரு இக்கட்டான நிலைமை இருந்து கொண்டே இருக்கும். சிடுசிடுப்பு, ரோசம், மனச் சோர்வு, விசனம் போன்றவைகள் தோல்விகளின் பிரதிபலிப்பாகும்.

பணம் சேர்க்கும் விஷயத்தில் நீதியும் நெறியும் குறுக்கிட அனுமதிக்க மாட்டார்கள். அன்றாட வீட்டு வேலைகளை ஒழுங்காகச் செய்துவரினும் காரியாலயத்தில் கடமையில் ஈடுபட்டிருப்பினும், வேறு பிற விஷயங்களில் ஊக்கமும், நிதி சேர்ப்பதில் எண்ணமும் இருக்கும்.

4 எண் நண்பர்கள் பலர் பொதுஜன விரோதிகள் ஆகலாம். வெளிப் படையாகவோ மறைமுகமாகவோ அவர்களுக்கு விரோதிகள் இருப்பார்கள். சீர்திருத்தக் கோட்பாடுடையவர்கள். பெண் பாலாருடன் பழகுவதில் ஒழுங்குக்கும் நியதிக்கும், 4 எண்காரரர் கட்டுப்பட மாட்டார்கள்.

மேற் குறிப்பிடப்பட்டுள்ள இயல்புகளுக்கு மாறுபட்ட குணங்கள் உடைய 4 எண்ணினரும் உண்டு. இவர்கள் பெருமைக் குணங்கள் மலிந்தவர்கள். இடாம்பீகம். நட்பு மகிழ்ச்சி போன்றவற்றை விரும்புபவர்கள். நண்பர்கள் சூழ, விருந்து, உபசாரம், களியாட்டம் என்பனவற்றில் காலத்தைக் கழிப்பவர்கள்.

சங்கீத விற்பன்னர்கள், கலைத் தொழில் நிபுணர்கள் திரைப்பட நாடக நடிகர்கள் இயக்குனர்கள், இந்த களிப்பூட்டும் குழுவைச் சேர்ந்தவர்கள். இவர்களிடம் தாராள மனப்பான்மையும், சினேகித உணர்வும் இரசிகத் தன்மையும் இடம் பெற்றிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நட்பு:-**

4 எண்ணினருக்கு நண்பர்கள் குறைவாகவே இருப்பர். விரைவில் யாருடனும் நட்புக் கொள்ள மாட்டார்கள். இவர்களின் நெருங்கிய நண்பர்கள் 1, 2, 7, 9, திகதிகளில் பிறந்தவர்களாகவோ அல்லது இந்த எண்களின் வரிசையில் பெயர் அமைந்தவர்களாகவோ இருப்பர்.

4, 6, 8, எண்ணினரும் இந்த எண்களின் வரிசையில் பெயர் அமைந்தோரும் இவர்களுக்கு நண்பர்களாக மாட்டார்கள். நட்புக் கொண்டால் விபரீத விளைவுகள் உண்டாக இடம் உண்டு.

**தொழில்:-**

ஒருவருக்குக் கீழ் பணி புரிவது இந்த எண்காரருக்கு ஒத்துவராது. சுதந்திரப் பிரியர்கள், ஆகையால் சுயமாகவே தொழில் செய்ய விரும்பும் இவர்களுக்கு **ஏற்றதொழில்கள்:** கதை கட்டுரை எழுதுதல், சொற்பொழிவு, திரைப்பட நாடக நடிப்பு, கார், பஸ், லொறி, டிராக்டர் போன்ற வாகனங்கள் வாடகைக்கு விடுதல். பண்ணை (ஆடு மாடு கோழி பன்றி) வீட்டுத்தளபாட விற்பனை (மேசை, நாற்காலி, கட்டில்) தரகு, சோதிடம், கட்டிட ஒப்பந்தம் (Building Contracts), கணக்காளர் (Accountants), கணக்கு ஆய்வாளர் (Auditors), மருத்துவம், பொறியியல் ஆகியன மிகவும் பொருத்தமானவை.

**மணவாழ்வு:-**

இந்த எண்ணில் பிறந்த ஆண்களில் சிலருக்குத்தான் உடல் ஆரோக்கியம் மிகுந்த மனைவியர் அமைகின்றனர். பெரும் பாலான 4 எண் நபர்கள் தாம் விரும்பியவர்களையே மணக்கத்துணிவர். இந்த எண்ணில் பிறந்த பெண்கள் அன்பும், பண்பும் நிறைந்த மனைவியராக இருப்பர்.

**நோய்கள்:-**

இந்த எண்ணினர் அதிகமாக நோய் வாய்ப்படுவதில்லை. சிலருக்கு குடல், இடுப்பு, பின் கழுத்து போன்ற உறுப்புகளில் ஒருவிதவலி உண்டாகும். சிலருக்கு தலை, கண், மூக்கு, தொண்டை தொடர்பான உபத்திரவங்கள் காணப்படும். சிலருக்கு இருதயம் வயிறு சம்பந்தமான வியாதியும், கொடூரமான தலையிடியும் காணப்படும்.

**பொருத்தமான திகதிகள்:-**

1, 9, 10, 18, 19, 27, 28, ஆகிய திகதிகளும், திகதி மாதம் வருடம், மூன்றையும் கூட்டினால் 1. 9 வரும் தினங்களும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொருத்தம் அற்ற திகதிகள்:-**

4, 6, 8, 13, 15, 17, 22, 24, 26, 31 ஆகிய திகதிகளும், திகதி மாதம் வருடம், மூன்றையும் கூட்டினால் 4, 6, 8 வரும் தினங்களும்

**பொருத்தமான நிறம், உடை:-**

வெளிர் நீலம் (Light Blue), வெளிர் மச்சள் (Light Yellow).

**பொருத்தம் அற்ற நிறம் உடை:-**

கறுப்பு.

**பொருத்தமான இரத்தினம்:-**

கோமேதகம் (Sardonyx) இந்தக்கல்லை உடலில் படும்படி அணிவது நன்மைதரும்.

**பொருத்தமான வாகனம்:-**

கூட்டு இலக்கம், 1, 9

**பொருத்தம் அற்ற வாகனம்:-**

கூட்டு இலக்கம் 4, 6, 8

**எண் 4 ஆதிக்கம் பெற்று பிறந்த உலகப்பிரமுகர் சிலர்**

| பெயர் | பிறந்த திகதி | எண்கள் | |
|---|---|---|---|
| | | பிறப்பு | கூட்டு |
| பாபுராவ் படேல் (இந்திய பத்திரிகை ஆசிரியர்) | 04- 04- 1904 | 4 | 4 |
| ஷெல்லி (Shelly) (ஆங்கிலக் கவிஞர்) | 04- 08- 1792 | 4 | 4 |
| திருமதி சரோஜினி நாயுடு (இந்திய கவிஞர்) | 13- 02- 1879 | 4 | 4 |
| ஜோர்ஜ் வாஷிங்டன் (அமெரிக்க ஜனாதிபதி) | 22- 02- 1732 | 4 | 1 |
| டிகோல் (Degaulle) (முன் நாள் பிரான்ஸ் அதிபர்) | 22- 11- 1890 | 4 | 6 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் - 07

## எண் 5 - புதன் (Mercury)

### சபலம் - சாதனை - தோழமை

அண்ட வெளியில் சூரியனை வலம் வரும் கிரகங்களில் உருவில் சிறியது புதன். எண் 5 புதனைக் குறிக்கும்.

1 முதல் 9 வரையுள்ள எண்களின் நடுவில் அமைந்து இருக்கும் எண் 5. இது பிற எண்களைத் தன்னிடத்தில் இழுக்கும் சக்தி கொண்டது. எண் 3, (குரு) போன்று வலிமையுள்ள எண் 5 (புதன்), நவக்கிரகங்களின் நடுவில் இருந்து நடு நாயகமாக விளங்குகிறது. எண் 4 (ராகு) புத்தியை இயக்கும் சக்தியை உடையது. எண் 5 (புதன்) உணர்ச்சி நரம்புகளுக்கு வலிமை கொடுப்பதாக அமைந்துள்ளது.

புதனுக்குச் சோம புத்திரன் என்று ஒரு பெயர் உண்டு. சோமன் என்பது சந்திரனுக்கு மறு பெயர். தேவ குருவாகிய பிரகஸ்பதியின் மனைவி தாரை, சந்திரனின் அழகில் மையல் கொண்டு மயங்கி, அவனைக் கூடிப் பெற்ற குழந்தை புதன்.

இதனால் புதன் கலப்புக் கிரகமாகிறான் "பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது" என்ற பழ மொழி உண்டு. புதன் வித்தை ஞானம், வாக்கு. மந்திர தந்திரம், வைத்தியம், சோதிடம், உயர் பதவி, போன்றவற்றிற்கு அதிபதி என்று சோதிடநூல்கள் கூறுகின்றன.

இந்த எண்ணைக் "காந்த எண்" என்று சொல்லலாம். காந்தம் இரும்பைத் தன்னிடம் இழுப்பது போன்று, இந்த எண்காரர் மக்களைக் கவர்வதில் சமர்த்தர்கள். எல்லோரும், நன்கு அறிந்த பிரமுகர்களாக வாழ்வார்கள். ஜன வசியத்தைக் குறிக்கும் இந்த எண்ணினரைச் சுற்றி மக்கள் கூட்டம் எப்போதும் இருக்கும்.

எண் 4 சமூக அமைப்பையும், சீர்திருத்தத்தையும் குறிக்கும், எண் 5 ஜனங்கள் ஒருவரோடு ஒருவர் கலந்து செய்ய வேண்டிய அரசாட்சி, வாணிபம் போன்ற பொதுவான விடயங்களை நடத்தும்.

ஆங்கில மாதங்களில் வரும் 5, 14, 23 ஆகிய திகதிகளில் பிறப்பவர்கள் எண் 5 இன் ஆதிக்கம் பெற்றவர்கள் ஆகிறார்கள். இவர்கள் புதன் கிரகத்தால் ஆளப்படுகிறார்கள். இதனால் இவர்கள் உணர்ச்சி வேகம் உள்ளவர்களாவும், கிளர்ச்சியை விரும்புகிறவர்களாகவும் காணப்படுவர்.

இருப்பினும் வழி தவறாத சிந்தனைகளும், செயல்களும், இருக்கும். வெளிப்பார்வைக்குப் படபடப்பாக இருந்தாலும், உள் உணர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் நல்ல நட்பு, நம்பிக்கை, ஆகியவை உள்ளவர்களாகவே இருப்பார்கள். புத்திக் கூர்மை கொண்டவர்கள், ஆகையால் உண்மைகளைக் கண்டு பிடிப்பதில் (துப்புத் துலக்குவதில்) ஆர்வம் கொண்டவர்களாக இருப்பார்கள்.

மெதுவாக நடைபெறும் அல்லது காலதமதமாகும், எந்தக்காரியத்தையும் இவர்கள் விரும்புவது இல்லை. எதிலும் வேக குணம் கொண்டவர்களாகவே இருப்பர். தங்களுடைய சொந்தக் கருத்துக்களாலும், திட்டங்களாலும் வேகமாக முன்னேறுவார்கள், இவர்கள் அதிகமாகத் தோல்வியைச் சந்திப்பதில்லை.

இந்த எண்ணினரை உலகம் வியந்து போற்றும் பல்வேறு துறைகளில் சாதனையாளர்களாகவும், கலைஞர்களாகவும், தொழில் அதிபர்களாகவும், அரசியல் தலைவர்களாகவும், மேதைகளாகவும், ஞானிகளாவும், புரட்சித் தலைவர்களாகவும் காணமுடிகிறது.

**குறிப்பு:-**

மே 21 முதல் ஜுன் 20 வரையில் உள்ள காலப் பகுதிலோ அல்லது ஓகஸ்ட் 21 முதல் செப்ரெம்பர் 20 வரையில் உள்ள காலப்பகுதியிலோ பிறந்த 5 எண் காரருக்கு மேற்கண்ட பலன்களும் குணங்களும் சிறப்பாகப் பொருந்தும்.

**பொதுவான குணங்கள்:-**

பொதுவாக 5 எண் ஆதிக்கர்கள், வேகமும் உணர்ச்சியும் கூடியவர்கள். எதையும் சாதிக்க முடியும் என்ற மனோதிடம் இவர்களுக்கு உண்டு. துணிவுடன் எந்தப் பிரச்சனையையும் அணுகி ஆராய்ந்து அதில் வெற்றிகாணும் வலிமையும் உடையவர்கள்.

இவர்கள் சோம்பல் காரணமாகத் தாமே கடும் பணி ஆற்றா விடினும் பிறரிடம் வேலை வாங்குவதிலும், உற்சாக மூட்டுவதிலும், ஊக்குவிப்பதிலும் சமர்த்தர்கள்.

கவர்ச்சி மிக்க இவர்கள் வசீகரமாக ஆடை அணிகள் அணிந்து அலங்காரமாக, மண மக்கள் போல வெளியே புறப்படுவர். சரள மாகச் சிரித்துப் பேசிப் பழகி, இனிக்கப் பேசித் தாமும் பிறரும் மகிழ்ச்சி அடையும் வகையில் நடந்து கொள்ளுவர்.

ஒரே இடத்தில், ஒரே சூழலில் தொடர்ந்து வாழ இவர்களால் இயலாது ஊர் சுற்றிவதில் உற்சாகம் இருக்கும், இதனால் அனுபவம் பெருகும்.

5 எண் நபர்களை (1) எண்ணின் பலம் கூடியவர்கள் (2) எண்ணின் பலம் குறைந்தவர்கள் (3) எண்ணின் பலம் இல்லாதவர்கள் என, மூன்று வகையினராகப் பிரிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எண்ணின் பலம் கூடிவர்கள் :-**

இவர்கள் அறிவின் முதிர்ச்சியாலும், அனுபவ மேன்மையாலும் ஆசைகளுக்கும் மன உணர்வுகளுக்கும் அடிமையாகாமல், அவைகளை வென்று உன்னத நிலைக்கு உயர்ந்து விடுவார்கள். இவர்களை ஆன்ம ஞானிகளாகவும் தத்துவ மேதைகளாகவும் மகான்களாகவும், அறிஞர் களாகவும் அரசியல் தலைவர்களாகவும், நீதிபதிகளாகவும், மருத்துவர் களாகவும், தொழில் அதிபர்களாகவும் உலகம் கண்டிருக்கிறது.

**எண்ணின்பலம் குறைந்தவர்கள்**

இவர்களுக்கு சபல புத்தியும் ஆசையும் நிறைந் திருக்கும். புகழ் சேர வேண்டும் என்ற மன உந்துதலும், வாழ்க்கையை முழுதாக அனுபவித்து விட வேண்டும் என்ற வைராக்கியமும், எப்படியும் பணம் பொருள் சேர்க்க வேண்டும் என்ற அவாவும், இவர்களைப் பல்வேறு தொழில்களில் ஈடுபட வைத்து விடும்.

எழுத்தாளர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், ஓவியர்கள், திரைப்பட நாடக வசன கர்த்தாக்கள், நடிகர்கள், பாடல் ஆசிரியர்கள், அழகுசாதனப் பொருள் தயாரிப்பாளர்கள். இதன் விற்பனையாளர்கள் போன்றோர், இந்த வகையைச் சார்ந்தவர்கள், இவர்கள் தாம் விரும்பியபடி புகழும் பொருளும் சேர்த்து மகிழ்ச்சியுடன் வாழக்காணலாம்.

**எண்ணின்பலம் இல்லாதவர்கள்:-**

இவர்களுக்கு சபல புத்தியும் ஆசையம் அளவுக்கு மீறி இருக்கும். கல்வி, செல்வம், புகழ், பதவி போன்ற எல்லாம் இருந்தும் தடுமாறும் மனநிலை இவர்களைத் தாழ்ந்த நிலைக்குத் தள்ளிவிடும்.

புலன்களின் வழியில் மனம் அலையும். மனம், தவறிய நெறியில் செல்லத் தூண்டும். கடமைகளை மறப்பர். உடமைகளை அழிப்பர். ஊருடன் பகையும் குரோதமும் ஏற்படும். மது, மாது என்ற இரண்டுமே மனதிற்குப் பிடித்தனவாக அமைந்துவிடும்.

கால மாற்றமும், இவர்கள் பெற்ற துன்ப அனுபவங்களும் இவர்களின் அறிவுக் கண்களைத் திறந்தால், பின்னர் சிறப்பான வாழ்க்கை அமையும். இவர்கள் தாமாக மனம் மாறி நல்வாழ்வு வாழ முயன்றாலன்றி, மற்றவர்கள் இவர்களைத் திருத்த முடியாது. அறிவுரைகளை அலட்சியம் செய்வர்.

**நட்பு:-**

5 எண் கார்களுக்கு அனேக நண்பர்கள் இருப்பார்கள். தடையின்றிச் சுலபமாக மற்றவர்களுடன் பழகுவர். 5, 14, 23, திகதிகளில் பிறந்தவர்களும் 5 எண் வரிசையில் பெயர் அமைந்தவர்களும் இவர்களுக்கு நண்பர்களாக இருப்பர்.

எல்லா எண்ணினரும் இவர்களுடன் நட்புடன் பழக முடியும். 9 எண் நபர்கள் இவர்களுக்கு மிகவும் விருப்பமானவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுக்கு பெரிய மனிதர்கள், பிரமுகர்கள், விரும்பி உதவுவார்கள்.

**தொழில்:-**

கலை சம்பந்தமான எல்லாத் தொழில்களும், வியாபாரமும் இவர்களுக்குப் பொருத்தமானது. முதல் எதுவும் தேவையில்லாத தரகுத் தொழில் மூலம் பணம் சேர்க்கும் சக்தி இவர்களுக்கு உண்டு.

தேக பலம் கொண்டு செய்யும் தொழிலைவிடப் புத்தி நுட்பத்தால் இயற்றும் தொழில் மிகவும் பொருத்தமாக இருக்கும்.

**மணவாழ்க்கை:-**

5 எண்ணினரில் ஒரு சிலருக்குத்தான் ஆரோக்கியம் உள்ள மனைவியர் கிடைக்கின்றனர். இந்த எண்ணினர் பெரும்பாலும் தாம் விரும்பியவர்களையே திருமணம் செய்யத் துணிவர். 5 எண் ஆதிக்கம் உள்ள பெண்கள் அன்பும் பண்பும் கொண்ட மனைவியராக இருப்பர்.

5 எண்ணினர் உணர்ச்சி வேகமும் சபல சித்தமும் உடையவர்கள். கண்டு பேசிப் பழகத் தொடங்கியதும் நேசிக்கத் தொடங்கி விடுவார்கள். சம்பிரதாயங்களும் சட்ட திட்டங்களும் இவர்களுக்குத் தடைக் கற்களாக அமையா. நிதானித்து எண் பொருத்தம் பார்த்துச் செய்யும் திருமணம் இவர்களுக்கு அமைதியான மண வாழ்வைக் கொடுக்கும்.

பொருத்தம் இல்லாமற் செய்யும் திருமணங்கள் இந்த எண்ணினருக்கு அமைதியான குடும்ப வாழ்வைத் தராது. அபிப்பிராய பேதங்களும் வாக்கு வாதங்களும் தலை தூக்கும். வாழ்வு அமைதியாகக் கழியின், குழந்தைப் பாக்கியம் குறைவாகவோ அல்லது இல்லாமலோ போகக் கூடும்.

**நோய்கள்:**

இந்த எண்காரர் சதா யோசனையில் மூழ்குவதால், மனம் நிலை குலைந்து அலைந்து அமைதியை இழக்கும். நித்திரையினால் கிடைக்கும் சுகம் கெடும். பலவீனம் பாரிச வாயு, திடீரென கைகள் அல்லது கால்கள் சோர்வடைதல், மூளைக் கிறுகிறுப்பு, சித்தப் பிரமை, காக்கை வலிப்பு போன்ற நரம்புகள் சம்பந்தமான கோளாறுகள் தோன்றக் கூடும் சிலருக்குத் தீராத தலை வலியும் மார்பு நோய்களும், இரத்தக் கொதிப்பும் காணப்படும்.

**பொருத்தமான திகதிகள் :-**

5, 9, 14, 18, 23, 27 ஆகிய திகதிகளும், திகதி மாதம் வருடம். மூன்றையும் கூட்டினால் 5, 9 வரும் தினங்களும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொருத்தம் அற்ற திகதிகள் :-**

7, 16, 25 ஆகிய திகதிகளும், திகதி மாதம் வருடம், மூன்றையும் கூட்டினால் 7 வரும் தினங்களும்.

**பொருத்தமான நிறங்கள் உடை :-**

சாம்பல் (Grey) மற்றும் எல்லா இலோசான நிறங்கள் (All Light Colours) நன்மை தருபவை.

**பொருத்தம் அற்ற நிறங்கள் உடை :-**

கறுப்பு, பச்சை, மற்றும் எல்லா ஆழ்ந்த நிறங்கள் (All Dark Colours).

**பொருத்தமான இரத்தினம் :-**

வைரம் (Diamond), ஒளி வீசும் வெள்ளைக் கற்கள். (Zircon)

**பொருத்தமான வாகன இலக்கம் :-**

கூட்டு எண் : 5, 9

**பொருத்தம் அற்ற வாகன இலக்கம் :-**

கூட்டு எண் : 7

**எண் 5 ஆதிக்கம் பெற்றுப் பிறந்த உலகப் பிரமுகர் சிலர்**

| பெயர் | பிறந்திகதி | எண்கள் | |
|---|---|---|---|
| | | பிறப்பு | கூட்டு |
| டொக்டர் ராதாகிருஷ்ணன் (இந்திய தத்துவஞானி) | 05-09-1888 | 5 | 3 |
| ஸ்ரீ. தியாகராஜஸ்வாமிகள் (சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவர்) | 05-05-1759 | 5 | 5 |
| ஐசன் ஹோவர் (முன் நாள் அமெரிக்க ஜனாதிபதி) | 14-10-1890 | 5 | 6 |
| அல்பேட் ஈன்ஸ்ரன் (விஞ்ஞானி) | 14-03-1879 | 5 | 6 |
| சுபாஷ் சந்திர போஸ் (இந்திய விடுதலை வீரர்) | 23-01-1897 | 5 | 4 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் - 08

## எண் 6 சுக்கிரன் (Venus)

### போகம் - ரசனை

எண் 6 சுக்கிரனைக் குறிக்கும். சுக்கிரன் அசுரர்களின் குரு. சுக்கிரனைக் "களஸ்த்திரகாரகன்" என்று சோதிட நூல்கள் கூறும். சூரியனைச் சுற்றிவரும் கிரகங்களில் ஒளி வாய்ந்த கிரகம் இதுவே.

ஆங்கில மாதங்களில் வரும் 6, 15, 24 ஆகிய திகதிகளில் பிறக்கிறவர்கள் சுக்கிர ஆதிக்கம் பெற்று 6 எண் மனிதராகின்றனர்.

இந்த எண்ணின் ஆதிக்கம் பெற்ற ஆண், பெண் இருபாலாரும் அழகான உடலமைப்புக் கொண்டவர்கள். தம்மைக் கண்டவரைக் கரும்பு என்று விரும்பச் செய்யும் கவர்ச்சியாளர்கள். "என்றும் பதினாறு வயதோ என்று" அதிசயிக்கச் செய்யும் தோற்றத்தினர்.

இவர்களும் 5 எண்காரரைப் போன்று, மற்றவர்களைக் கவரும் குணமுடையவர்கள். மற்றவர்களைத் தம்வசம் இழுத்து தாம் வசதியாக வாழும் தந்திரம் சரிவரத் தெரிந்தவர்கள். அப்படி இருந்தாலும் கள்ளம் கபடம் அற்ற அன்பும், கனிவான எண்ணங்களும், இனிமையான பேச்சும் நிறையப் பெற்றவர்கள். தம் கொள்கைகளை விட்டுக்கொடுக்காத மன உறுதியும், ஓரளவு பிடிவாத குணமும் காணக்கூடும்.

6 எண்ணினர் அன்புக்கு அகப்படுபவர்கள். ஆணவத்திற்கு விரோதிகளாக இருப்பதுடன், அடிபணிய மறுப்பவர்களாகவும் இருப்பர். இவர்கள் காதல் வசப்பட்டவர்களாகவும், சிற்றின்பப் பிரியர்களாகவும் காணப்படுவர். ஆக்க சக்தியும், நிர்வாகத் திறமையும் உடையவர்கள். தடையின்றி முன்னேறி, தங்களுடைய இலட்சியங்களைப் பூர்த்தி செய்வார்கள். சுகபோக வாழ்க்கையையே விரும்புபவர்கள்.

இவர்களில் சாதாரண வசதி படைத்தவர்களும், சொற்ப பொருளைக் கொண்டு மிகவும் பகட்டாகக் காட்டிக் கொள்ளுவார்கள். செய் நன்றியை இவர்களுடைய உள்ளுணர்வு நம்புவது இல்லை. கலை உள்ளம் படைத்தவர்கள், ஆதலால் கலைக்காகவும் கலைஞர்களுக்காகவும் முழு மனதுடன் பொருள் வழங்குவர். பெருமைக்காகவும், விளம்பரத்துக்காகவும் தான, தருமங்கள் செய்வர்.

இத்தகைய 6 எண் ஆதிக்கர்கள் பண விஷயத்தில் மிகவும் பாக்கியசாலிகள். இவர்களுக்கு, எந்த வழியிலேனும் பணம் வந்து கொண்டே இருக்கும். இவர்களுக்கு இது மிகவும் புதுமையாகவும் இருக்கும்.

பொது நூலக சேவை
யாழ்ப்பாணம்



5087 C.C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தமாக வாழ விரும்பும் இவர்களுக்கு செலவும் இருந்து கொண்டே இருக்கும்.

6 எண் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் கவிஞர்களாகவும், கலைஞர்களாகவும், பாடகர்களாகவும், சங்கீத வித்வான்களாகவும், கலைத்துறைப் பத்திரிகை ஆசிரியர்களாகவும், எழுத்தாளர்களாகவும், அதிகார பதவி வகிப்போராகவும், வியாபாரிகளாகவும், சிறந்து விளங்கக் காணலாம். ஆன்மீகத் துறையிலும் இவர்களைக் காணமுடியும்.

**குறிப்பு:**

ஏப்பிறில் 20 முதல் மே 20 வரையில், அல்லது செப்ரெம்பர் 21 முதல் ஒக்ரோபர் 20 வரையில், உள்ள காலப்பகுதிகளில் பிறந்தவர்களுக்கு மேற்கண்ட குணங்களும் பலன்களும் பொருத்தமாக அமையும்.

**பொதுவான குணங்கள்:-**

அழகான தோற்றமும், மிடுக்கான நடையும், காந்தசக்தி ஒளிவிடும் கண்களும் பொருந்திய இவர்களை இலகுவில் சுக்கிர (எண் 6) ஆதிக்கர் என்று கண்டு பிடித்து விடலாம். இவர்களுடைய மனம் எப்பொழுதும் அழகை ஆராதனை செய்வதிலேயே நிலைத்திருக்கும். அழகான பொருள்களிலும், சங்கீதம் நடனம் முதலிய மகிழ்ச்சியைத் தூண்டும் விஷயங்களிலும் ஈடுபட்டிருக்கும். புலன்களால் அனுபவிக்கப்படும் இன்பங்களைப் பெறுவதே இவர்களுடைய வாழ்கையின் குறிக்கோளாக இருக்கும்..

கலையுள்ளம் கொண்டவர்களாகையால் தங்கள் வீட்டை அழகான பொருள்களால் அலங்கரித்து நிறைத்து விடுவர். அனைவருடனும் நட்பு உணர்வுடன் பழகும் இவர்கள் எப்பொழுதும் மலர்ந்த முகத்துடன் காணப்படுவர்.

சிலர் நன்றி உணர்வு இல்லாதவர்களாக இருப்பர். இந்த எண்ணினரில் பல ஆண்கள் தங்க நகைகளை அணியும் ஆடம்பரப் பிரியர்களாக இருக்கக் காணலாம்.

**எண் 6 இன் பலம் மேன்மையாக இருந்தால்:-**

இவர்கள் உடல் சக்தியும், ஆன்ம சக்தியும் நிறைந்து மிடுக்கான தோற்றத்தினராக இருப்பர். அன்புக்கும், அமைதிக்கும் சாந்தத்துக்கும் இருப்பிடமாக இருப்பர். எந்த நிலையிலும், எங்கும் சமாதானம் நிலவி, மக்கள் நலமாக வாழவேண்டும் என்று சதா நினைத்து, அதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து அந்த முயற்சியல் வெற்றியும் அடைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரோபகார சிந்தையும், பணிவும் பிறர் துன்பம் கண்டு சகியாமையும் இவர்களைப் பிரபலமாக்கிவிடும். இறைபக்தி இவர்களுக்கு இயற்கையாகவே இருக்கும்.

இவர்களை ஆன்மீகவாதிகளாகவும், தபோதனர்களாக வும், மதத் தலைவர்களாகவும், அரசியல் தலைவர்களாகவும் புகழுடன், வாழக் காணலாம்.

**எண் 6 இன் பலம் குறைவாக இருந்தால்:-**

சுகபோக வாழ்க்கையையே விரும்புவர். பொருள் சேர்ப்பதிலும் புகழ் பெறுவதிலும் ஆசையும் ஆர்வமும் அளவுக்கு மீறி இருக்கும். பணம் சேர்ப்பதில் ஓய்வு இல்லாத முயற்சியும், அதற்கு ஈடான அதிர்ஷ்டமும் சந்தர்ப்பமும் கிடைத்தபடியே இருக்கும். மேலான இலட்சியங் கள் எதுவும் இராது. உணவு, உறக்கம், உல்லாச வாழ்க்கை, விருந்து கேளிக்கை ஆகியவற்றில் காலம் கழியும்.

இவர்களைக் கற்பனைத்திறன் நிறைந்த ஓவியர்களாக வும், எழுத்தாளர்களாகவும், இசை, வாத்தியக் கலைஞர்களாகவும், திரைப்பட நாடக நடிகர்களாகவும், இயக்குனர்களாகவும், புகழுடன் பொருளும் சேர்த்து மகிழ்ச்சியுடன் வாழ்வதைக் காணலாம்.

அழகு சாதனப்பொருள் விற்பனையாளர் அலங்கரிப்பாளர் (Make up) சோதிடர்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள், பொறியியல் நிபுணர்கள் ஆகியோரும் இந்த எண்ணினரில் உண்டு.

**எண் 6 இன் பலம் இல்லாதவர்கள்:-**

இவர்கள் வாக்கு வன்மையாலும் வசீகர சக்தியாலும், தமது காரியங்களைச் சாதித்துக் கொள்ளும், சமர்த்தர்கள். இவர்களுடைய பிரசங்க சக்தி கேட்பவரை வசப்படுத்திவிடும். இவர்களிடம் பேராசை, சூது, வஞ்சகம், நண்பர்களிடம் நன்றி உணர்வு இல்லாமை, போன்ற தாழ்ந்த குணங்கள் காணப்படும். அதிக சிற்றின்ப எண்ணம், பண நாட்டம் ஆகியன மனதை நிறைத்திருக்கும். சோதிடம், மாந்திரிகம், வைத்தியம் என்பனவற்றின் பேரால் மக்களை வசப்படுத்திப் பொருள் சேர்த்துச் சுகமாக வாழ்வர்.

**நட்பு:-**

தாங்கள் விரும்புகிறவர்களுடன் அன்புடனும் பண் புடனும் நட்பு உணர்வுடனும் பழகுவார்கள். நண்பர்கள் அல்லாதவர்களு டனும் சாதாரணமாகப் பழகும் இவர்களுக்கு எல்லோரும் வேண்டிய வர்களே.

**தொழில்:-**

கவர்ச்சி நிறைந்த இவர்களுக்குக் கலைத் தொழில் கை கொடுக்கும். மனதிற்குப் பிடித்த கலை சம்பந்தமான எந்தத் தொழிலும் பிரகாசிக்கச் செய்யும். கண்ணைக் கவரும் துணி, பட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபரணம், பிளாஸ்ரிக் பொருள் வியாபாரம் முன்னேற்றத்தைக் கொடுக்கும், வட்டி, அடைவு கடையும் இலாபகரமாக நடைபெறும். எந்தத் தொழிலிலும் பிரகாசிக்கும் இவர்களுக்கு அரசாங்க பதவிகளும் ஏற்றவையே.

**மணவாழ்வு:-**

இந்த எண்ணின் ஆதிக்கம் பெற்ற அனைவரும் மகிழ்ச்சியாகவே மண வாழ்வை அனுபவிப்பர். பொண்களுக்குத் தகுதி, அந்தஸ்த்து, எண். பொருத்தம் ஆகியன ஆராய்ந்து திருமணம் செய்து வைத்தால் மகிழ்ச்சிகரமான மணவாழ்வு உண்டு.

**நோய்கள்:-**

இந்த எண்ணினர் ஆரோக்கியம் உடையவர்களாகக் காணப்பட்டாலும் சிலர் உடல் வலியாலும், அசதியாலும், அஜீரணத்தால் ஏற்படும் வயிற்று உபாதையாலும் சிரமப்படுவர். சிலர் உணவுக் கட்டுப்பாடு இல்லாத காரணத்தால் நீரிழிவு மற்றும் மூல நோயாலும் துன்பமடைவர்.

சிலருக்குத் தோல் மற்றும் பிறப்பு உறுப்புகள் சம்பந்தமான நோய்களும், இருதய பலவீனமும் உண்டாகும். மலச்சிக்க லும் இருதய பலவீனமும் இவர்களுக்கு முக்கிய நோய்களாகும்.

**பொருத்தமான திகதிகள்:-**

6, 9, 15, 18, 24, 27 ஆகிய திகதிகளும், திகதி மாதம் வருடம், மூன்றையும் கூட்டினால் 6, 9 வரும் தினங்களும்.

**பொருத்தம் அற்ற திகதிகள்:-**

1, 10, 19, 28, 3, 12, 21, 30, 4, 13, 22, 31, 7, 16, 25, ஆகிய திகதிகளும், திகதி மாதம் வருடம், மூன்றையும் கூட்டினால் 1, 3, 4, 7 வரும் தினங்களும்.

**பொருத்தமான நிறம் உடை:-**

பச்சை, நீலம், சிவப்பு மற்றும் இவை சார்ந்த இலேசான நிறங்கள் (Light Colours).

**பொருத்தம் அற்ற நிறங்கள் உடை:-**

வெள்ளை, கறுப்பு, றோஸ், மஞ்சள்.

**பொருத்தமான இரத்தினம்:-**

மரகதம் (Emerald), பச்சைக் கல்லு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொருத்தமான வாகனம்:-**

கூட்டு எண் : 6, 9.

**பொருத்தம் அற்ற வாகனம்:-**

கூட்டு எண் : 1, 3, 4, 7.

**எண் 6 ஆதிக்கம் பெற்றுப் பிறந்த உலகப் பிரமுகர் சிலர்:-**

| பெயர் | பிறந்த திகதி | எண்கள் | |
|---|---|---|---|
| | | பிறப்பு | கூட்டு |
| ரவீந்தர நாத் டாகூர் (இந்தியக் கவிஞர்) | 06.05.1861 | 6 | 9 |
| ஆப்டெல் நசீர் (முன் நாள் எகிப்திய ஜனாதிபதி) | 15.01.1918 | 6 | 8 |
| C.N. அண்ணாதுரை (முன் நாள் தமிழ் நாட்டு முதல்வர்) | 15.09.1908 | 6 | 6 |
| விக்ரோறியா மகாராணி (62 ஆண்டுகள் ஆட்சி செய்தவர்) | 24.05.1819 | 6 | 3 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் - 09

## எண் 7 - கேது (Neptune)

### ஆத்மீகம் - சோதனை

எண் 7 கேதுவைக் குறிக்கும். இது சந்திரனின் (எண் 2 இன்) சாயல் கிரகம் என்று சொல்லப்படுகிறது. ராகுவைக் கொடுக்கும் கிரகம் என்றும் கேதுவை கெடுக்கும் கிரகம் என்றும் கூறுவதுண்டு. கேதுவுக்கு மோட்சகாரகன் என்ற பெயரும் உண்டு. ஞானத்திற்கும், பக்திக்கும் கேதுவே காரணமாகிறது. ஆன்மீக விஷயங்களில் உயர்வான தன்மையைக் குறிப்பதும், கொடுப்பதும் கேதுவே.

ஆங்கில மாதங்களில் வரும் 7, 16, 25 ஆகிய திகதிகளில் பிறக்கிறவர்கள் 7 இன் ஆதிக்கம் பெற்றவர்கள் ஆவார்கள். இவர்கள் அறிவை வளர்க்கும் விஷயங்களில் ஈடுபாடு உடையவர்களாகவும், நூல்களைக் கற்று உணர்வதில் ஓரளவு காலத்தைக் கழிப்பவர்களாகவும் இருப்பர்.

பழங்காலத்தையும், தற்காலத்தையும் ஒப்பிட்டுப் பார்ப்பார்கள். மத சம்பந்தமான விஷயங்களிலும், தத்துவ ஆராய்ச்சியிலும் அக்கறை கொண்டவர்களாக இருப்பர். இருந்து கொண்டே செய்யும் வேலையிலும், ஏகாந்த வாசத்திலும் விருப்பம் கொண்டவர்கள்.

இந்த எண்ணினர் பொதுவாகத் தீர்க்க தரிசனம் உடையவர்கள். வரும் பொருள் உரைக்கும் சக்தி படைத்தவர்கள்.

இவர்களை மதத் தலைவர்களாகவும், நீதித்துறையிலும், அரசியல் துறையிலும், வணிகர்களாக (ஏற்றுமதி, இறக்குமதி) வர்த்தகத்துறையிலும், மக்களுக்காகத் தம் வாழ்வைக் கழிக்கும் தியாகிகளாகவும், கலைத் துறையிலும் காணலாம்.

**குறிப்பு:**

ஜுன் 21 முதல் ஜுலை 20 வரையிலான காலப் பகுதியில் பிறந்தவர்களுக்கு மேற்கண்ட குணங்களும் தொழில் துறைகளும் மிகவும் சிறப்பாகப் பொருந்தும்.

**பொதுவான குணங்கள்:-**

7, 16, 25 திகதிகளில் பிறக்கிறவர்கள் எந்த மதத்தைச் சார்ந்தவர்களாக இருப்பினும், மிகுந்த தெய்வ பக்தி உடையவர்களாகக் காணப்படுவர். இவர்களுடைய உள்ளத்தில் நேர்மையும், பேச்சில் இனிமையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையில் எளிமையும் காணப்படும். தன்னை வெறுப்பவர்களையும் அன்பால் வென்று அணைத்திடுவர்.

**எண் 7 இன் பலம் கூடியவர்கள்:-**

இவர்களுக்கு உலக இன்பங்களை அனுபவிக்கும் பாக்கியம் இல்லை என்றே சொல்லலாம். சொல்லொணாத் துன்பங்களும் கஷ்டங்களும் அனுபவித்து வாழ்க்கையை வெறுப்பர். எந்த வழியாலும் உயரமுடியாது என்ற முடிவுக்கு வந்து முத்தியை விரும்புகிறவர்களாக மாறிவிடுவர்.

இவர்களை முக்காலத்தையும் அறியும் ஆற்றல் மிக்க ஞானிகளாகவும், ஆன்மீக வாதிகளாகவும், மதத் தலைவர்களாகவும், மத குருமாராகவும் மதபோதகர்களாகவும்.உலக மக்களுக்காகவே உழைக்கும் தியாகிகளாகவும் காணலாம்.

**எண் 7 இன் பலம் குறைந்தவர்கள்:-**

இவர்களுக்குப் பண ஆசையும், புகழ் ஆசையும், அளவுக்கு மிஞ்சி இருக்கும். இவர்களை அரசியல், நீதி, எழுத்துக்கலை துறைகளில் காணலாம். கற்பனைத் திறன் படைத்த இவர்கள், கவிஞர் களாகவும், ஓவியர்களாகவும் சங்கீத வித்வான்களாகவும், நாடக திரைப்பட நடிகர்களாகவும், கதை வசன பாடல் ஆசிரியர்களாகவும், சிறந்த புகைப்பட நிபுணர்களாகவும், சிற்ப சாஸ்த்திர நிபுணர்களாகவும், புகழும் பொருளும் சேர்த்து மகிழ்ச்சியுடன் வாழக் காணலாம்.

இவர்களுடைய வாழ்க்கை இவர்களுக்கு ஒரு காந்த சக்தி இருப்பதை நன்கு உணர்த்தும். ஏனையோரைக் கவரும் இயல்பு உடையதாக இருக்கும். பிறவியிலேயே அபூர்வ சக்திகள் உடையவர்கள். சலியாத உழைப்பால் மேன்மையடைகின்றனர்.

**எண் 7 இன் பலம் இல்லாதவர்கள்:-**

இவர்களில் சிலர் முன்கோப குணம் உடையவர்கள். கோபத்தின் காரணமாக மற்றவர்களுடன் பகைப்பர். மனத்துணிவு இல்லாதவர்கள். ஆனால் மிகவும் துணிவு உள்ளவர்கள் போல நடிப்பர். உள் நடுக்கம் இவர்களுக்கு உண்டு.

சிலர் வாயாடிகள். விவேகம் மிகுந்தவர்கள். மற்றவர்களை வாயால் மடக்கி விட முயலுவர். முடியாவிட்டால் சாதுரியமாகத் தாமே அடங்கிச் சுய சமாதானம் செய்யப் புறப்பட்டு விடுவர்.

இந்தக் குணத்தால் நண்பர்களோடு, தாய் தந்தையோடு, அக்கா, தங்கையோடு, அண்ணன் தம்பியோடு, மனைவியோடு உறவினரோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவரோடு அயலவர்களோடு உயர் அதிகாரிகளோடு, அடிக்கடி பகைத்துக் கொள்ளுவர்.

இவர்களின் சுபாவம் அறிந்து பழகுவோரே, இவர்களுடன் பகையற்ற நட்புடன் வாழ முடியும். நீடித்து நண்பர்களாக இருக்கமுடியும். சிலரிடம் அடுத்துக் கெடுக்கும் குணமும் காணப்படும். பெரும்பாலும் இவர்களிற் பலர் அடுத்தவரை நம்பித்தான் ஏமாற்றமடைகின்றனர். இவர்கள் கூடியவரை சேர்ந்தவரை நம்பாமல் தன் கையே தனக்கு உதவி என்று மன உற்சாகத்துடன் வாழ்ந்தால் ஏமாற்றம் அடைவதைத் தவிர்க்கலாம்.

இவர்கள் கவர்ச்சி மிகுந்தவர்களாக இருந்தும் பெரும்பாலானோர் அதிர்ஷ்டம் அற்றவர்களாகவே காணப்படுகின்றனர். பின் வாங்குகின்ற குணமும் இவர்களுக்கு உண்டு. பெரிய காரியங்களைச் செய்யும் இவர்களிற் சிலர் அந்தஸ்த்துக்கு ஒவ்வாத காரியங்களிலும் ஈடுபடுவர். உன்னத நிலையில் வாழ்ந்தவர் பின்னர் சாதாரண வாழ்க்கை வாழ்வர்.

இவர்களில் அனேகருக்குக் கனவுகள் பலிக்கும். பலருக்குத் தெய்வீகமான காட்சிகள் ஏற்படுவதுண்டு. மனோ வசிய சக்திகள் வளர்ந்த போதிலும், இவர்களில் அனேகர் விரும்பும், திரி கால ஞானமும். அதை ஒத்த சித்திகளும் ஏற்படுவதில்லை. காரணம், இவர்கள் நிறைவேறாத ஆசைகளுடன் வாழ்க்கை நடத்தவே பிறந்தவர்கள். கடைசிவரை ஏதாவது ஒரு குறை இருந்து கொண்டே இருக்கும். சாதாரண விஷயங்களில் கூட இவர்களுடைய முயற்சிகள் முடிவை நெருங்கும் போது கைகூடாமற் போகும்.

**நண்பர்கள்:-**

எண் 7 நபர்களுக்கு இணையற்ற நண்பர்கள் எண் 2க் காரரே. இவர்களுக்கு 2, 11, 20, 29 திகதிகளில் பிறந்ததோரும், 2 எண் வரிசையில் பெயர் அமைந்தோருமே நண்பர்களாக இருப்பர். அடுத்து எண் 1 நபர்களும், இந்த எண்ணில் பெயர் அமைந்தோரும் நண்பர்களாக இருக்கமுடியும்.

**தொழில்:-**

எழுத்துத்துறையும் கலைத்துறையும் இவர்களுக்குக் கைகொடுத்து உயர்த்தும். துணிவியாபாரம் மிகவும் பொருத்தமானது. கடல் கடந்த வாணிபம் (ஏற்றுமதி இறக்குமதி) இவர்களுக்கு பெயரையும் புகழையும் செல்வத்தையும் கொடுக்கும்.

**மண வாழ்க்கை:-**

எண் 7 நபர்களுக்கு மண வாழ்க்கை சிறப்பாக அமைந்ததாக அறிய முடியவில்லை. அனேகருக்கு மனதிற்குப் பிடித்த துணை கிடைப்பதில்லை. கிடைத்தாலும் பலவித துன்பங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவிக்க நேரிடுவதால், குடும்ப வாழ்க்கை குட விளக்குப் போன்று பிரகாசமற்றுவிடுகிறது.

இவர்களுக்குப் பொருத்தமானவர்கள், எண் 2 நபர்கள் அல்லது எண் 2 வரிசையில் பெயர் அமைந்தவர்களே. இந்தத் துணை கிடைக்கப் பெறின் மணவாழ்க்கை சிறப்பாக அமையும்.

கவர்ச்சியும் அழகும் நிறைந்த இந்த எண்ணில் பிறந்த சில பெண்களுக்கு இவர்களுடைய அந்தஸ்த்துக்குக் கூடிய அல்லது தாழ்ந்த துணை கிடைப்பதைக் காண முடிகிறது. இது சில சமயம் சிக்கல்களை உண்டாக்கும்.

பொருத்தமான, அதிர்ஷ்டகரமான எண்ணில் பெயரை அமைத்து அந்த எண்ணுக்குரிய எண்ணங்களை வளர்த்துக் கொண்டால் நிச்சயமாக மகிழ்ச்சிகரமான மணவாழ்வு அமையும்

**நோய்கள்:-**

மலச்சிக்கல் இவர்களுக்கு இயற்கையான எதிரியாக இருக்கும். இதன் காரணமாகப் பின்னர் கீல்வாதம் (Rheumatism) என்று கூறப்படும் பிடிப்பு சம்பந்தமான நோய்கள் தோன்றும். இவர்களுக்கு வாலிப வயதில் வியர்வை சம்பந்தமான தோல் நோய்களும், நடு வயதிற்கு மேல் வாதத்துடன் தொடர்பு கொண்ட தசைப்பிடிப்பு மூட்டு வலி ஆகியனவும் ஏற்படும்.

**பொருத்தமான திகதிகள்:-**

1, 2, 4, 7, 10, 11, 13, 16, 19, 20, 22, 25, 28, 29, 31 ஆகிய திகதிகளும், திகதி மாதம் வருடம், மூன்றையும் கூட்டினால் 1, 2, 4, 7 வரும் தினங்களும்.

**பொருத்தம் அற்ற திகதிகள்:-**

8, 17, 26 ஆகிய திகதிகளும் திகதி மாதம் வருடம், மூன்றையும் கூட்டினால் 8 வரும் தினங்களும்.

**பொருத்தமான நிறங்கள், உடை:-**

இலேசான பச்சை (Light Green), இலேசான மஞ்சள் (Light Yellow), எல்லா இலேசான நிறங்களும்.

**பொருத்தம் அற்ற நிறங்கள், உடை:-**

கறுப்பு, சிவப்பு மற்றும் எல்லா ஆழந்த நிறங்களும் (All Dark Colours).

பொது நூலக பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொருத்தமான இரத்தினம்:-**

வைடூரியம் (Cats' Eye) முத்து (Pearl) இவைகளில் ஏதாவது ஒன்றை உடலில் படும்படி அணிவது நன்மைதரும்.

**பொருத்தமான வாகனம்:-**

கூட்டு எண் 7, 2

**பொருத்தம் அற்ற வாகனம்:-**

கூட்டு எண் 8

**எண் 7 ஆதிக்கம் பெற்றுப் பிறந்த உலகப் பிரமுகர் சிலர்**

| பெயர் | பிறந்த திகதி | எண்கள் | |
|---|---|---|---|
| | | பிறப்பு | கூட்டு |
| எலிசபெத் மகாராணி I (திருமணம் புரியாமல் இருந்தவர்) | 07.09.1533 | 7 | 1 |
| சார்லி சப்ளின் (நகைச்சுவை மன்னன்) | 16.04.1889 | 7 | 1 |
| எம். ஏ. ஜின்னா (முன் நாள் பாகிஸ்தான் பிரதமர்) | 25.12.1876 | 7 | 5 |
| ஐசாக் நியூட்டன் (ஈர்ப்பு சக்தியைக் கண்டு பிடித்தவர்) | 25.12.1642 | 7 | 5 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் - 10

## எண் 8 சனி (Saturn)

### மந்தம் - வேதனை

எண் 8 சனி கிரகத்தைக் குறிக்கும். இது சனீஸ்வரன் என்று அழைக்கப் பட்டாலும் "சனைச்சரன்" என்பதே இதற்கு மிகவும் பொருத்தமான பெயர் ஆகும். சனை: மெதுவாக, சர: சஞ்சாரம். சனி கிரகம் மெதுவாகப் சஞ்சாரம் செய்வதால் இதற்கு மந்தன் என்ற பெயரும் உண்டு.

ஆயுள் காரகன், காந்தன், நீலன், முடவன், சூரிய புத்திரன் என்ற பெயர்களையும் சோதிடநூல்கள் குறிப்பிடக்காணலாம். சாதகத்தில் எட்டாம் இடம் ஆயுள் ஸ்தானம் எனப்படும்.

ஆங்கில மாதங்களில் வரும் 8, 17, 26 ஆகிய திகதிகளில் பிறக்கிறவர்கள் சனி ஆதிக்கம் பெற்று 8 எண்ணினர் ஆகின்றனர். பிறந்ததிகதி, மாதம், வருடம், மூன்றையும் கூட்டினால் 8 வருமானால், அவர்களும் இந்த எண்ணால் ஆளப்படுகிறவர்களே. இதுமட்டுமன்றி ஒருவருடைய பெயர் எண், 8 ஆக வருமாயின் அவர்களிலும், இந்த எண்ணின் ஆதிக்கம் படிய ஆரம்பித்து விடும்.

இந்த எண்ணினரில் உலகம் வணங்கும் அருளாளர்கள், தியாகிகள். தேசத்தலைவர்கள், அறிஞர்கள், நீதிபதிகள், அமைச்சர்கள், பேராசிரியர்கள், உலகம் அறிந்த தொழில் நிறுவன உரிமையாளர்கள், கோடீஸ்வரர்கள், நியாயதுரந்தரர்கள், மருத்துவர்கள் ஆகியோரும் உளர்.

**குறிப்பு :-**

டிசம்பர் 21 முதல் ஜனவரி 20 வரை உள்ள காலப்பகுதியில், அல்லது ஜனவரி 21 முதல் பெப்ரவரி 20 வரை உள்ள காலப்பகுதியில். பிறக்கிறவர்களுக்கு எண் 8 இன் ஆதிக்கம் மேலோங்கி நிற்கும்.

**பொதுவான குணங்கள் :-**

இந்த எண்ணினரில் பலர் "துர் அதிஷ்டம், கெடுகாலம், விசித்திரமான விதி" என்றெல்லாம் சொல்லியபடி வாழ்க்கையில் ஓயாமல் போராடிக் கொண்டிருப்பார்கள். சகல விதமான வசதிகள் இருந்தாலும் இவர்களுடைய உள்ளுணர்வு அவற்றை ஏற்றுக் கொள்வதில்லை. எல்லாம் இருந்தும் எதுவும் இல்லாதவர்கள்போலவும், மற்றவர்களிடமிருந்து ஒதுக்கபபட்டவர்கள், கஷ்டப்படப் பிறந்தவர்கள் என்று வருந்திக் கொண்டே



127052
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பர். எதையோ பறி கொடுத்ததைப் போன்ற உணர்வு இவர்களுடைய முகத்தில் பிரதிபலிக்கும்.

சிலர் சதா யோசனையில் மூழ்கியிருப்பர். மனதில் உற்சாகம் இராது. தன்னம்பிக்கை குறைந்த இவர்கள், எந்த முயற்சியிலும் ஈடுபடாமல். தயங்கியபடி இருப்பர். தனிமையில் இருந்து தன்னையும், தனது வாழ்க்கையையும் பிறருடன் ஒப்பிட்டுக் கலங்கியபடி காலம் கழிப்பர்.

சிலருக்கு வாழ்க்கையில் துன்பங்களும், எதிர்ப்புகளும் ஏமாற்றங்களும், தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும், சிலர் வாழ்க்கையில் வெறுப்படைந்து தம்மைப் பொதுச் சேவைக்கு அர்ப்பணித்து மனத் திருப்தியுடன் வாழ்வர்.

குழந்தைச் செல்வம் இல்லையே என்று ஏங்குவோரையும் மருத்துவர்களுக்குப் புரியாத, மருந்தால் மாற்ற முடியாத வியாதிக்காரர்களை யும் இந்த எண்ணில் பிறப்பவர்களில் காணலாம்.

ஏகாந்த மனப் போக்கும், நெறி தவறிய சிந்தனைகளும், சந்தேகங்களும், மனதில் குடி கொண்டிருக்கும். இவர்கள் மற்றவர்களை நம்பித்தான் ஏமாற்றம் அடைகின்றனர்.

எண் 8 விசித்திரமானது. இந்த எண்காரர் விதியின் கைப்பாவைகள். இவர்கள் வாழ்வில் பெருவெற்றியோ, அல்லது முழுத் தோல்வியோ ஏற்படும். நடுத்தரமான வாழ்க்கை வாழமாட்டார்கள்.

வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு ஈவு இரக்கம் அற்ற குணத்தினராகத் தோற்றமளிப்பர், தனிமையை நாடுவதால். (திடமான தெய்வ நம்பிக்கையுடன், தன்னம்பிக்கையையும் வளர்த்துக் கொண்டால், எண்ணங்களில் தெளிவும் வாழ்வில் அமைதியும் உண்டாகும்.)

**எண் 8 இன் முதன்மையானோர்:-**

வேத சாஸ்த்திரங்களில் வல்லவர்களாகவும். கலைத்துறையில் ஆழ்ந்த ஞானம் உடையவர்களாகவும், சாந்த சொரூபிகளாவும், கருணை உள்ளம் கொண்டவர்களாகவும், பிறர் துன்பம் கண்டு சகியாதவர்களாகவும், அநீதிகளை எதிர்த்துப் போராடுபவர்களாவும், உலகப்புகழ் பெற்ற கோடீஸ்வரர்களாகவும், தொழில் அதிபர்களாகவும், பேரறிஞர்களாகவும் வாழ்வதைக் காணலாம்.

**எண் 8 ஆதிக்கரில் இடைநிலையினர்:-**

இவர்களை வியாபாரத்துறையிலும், நீதித்துறையிலும், அரசியல் துறையிலும், இரசாயனத்துறையிலும் விவசாயத் துறையிலும் காணலாம். இவர்களுடைய வாழ்வும், எதிர் காலமும் ஓரளவு மகிழ்சி யுடையதாக இருக்கும். சட்டதிட்டங்களுக்கு உட்பட்டுப் பாதிக்கப் படாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம் ஆவணம்

தாகவும் இருக்கும். இவர்களுடைய வாழ்க்கை 1. 3, 5, 9 ஆகிய எண்களின் ஆதிக்கத்தால் நடைபெறும்.

**எண் 8 ஆதிக்கரில் கடைநிலையினர்:-**

இவர்கள் பார்ப்பதற்குக் கண்ணியம் உள்ளவர்களாகத் தோன்றினாலும், எண்ணத்தில் தூய்மை அற்றவர்களாவே இருப்பர், முகத்தில் புன்சிரிப்புடன் தோன்றும் இவர்கள் மனதில், சுய நலமும், பேராசையும், போகங்களில் அதிக இச்சையும் கொழுந்து விட்டு எரியும்.

இவர்களுடைய மேன்மை வெளித் தோற்றமே. கண்ணியமாகத் தொழில் செய்யும் எண்ணம் இன்றிக், குறுக்கு வழியில் பணம் சேர்க்கும் முயற்சியில் ஈடுபடுவர். சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருப்பர்.

இவர்களுடைய வாழ்க்கை விதியினால் வரையறுக்கப் பட்டதாகவே இருக்கும். தங்கள் முயற்சியால் விதியின் தாக்கத்தை மாற்றவோ, குறைக்கவோ, இவர்களால் முடியாது. அதுமட்டுமன்றி சட்டதிட்டங்களால் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். முடிவு அனேகமாகத் துன்பகரமானதாகவே இருக்கும்.

**நட்பு :-**

இவர்கள் யாருடனும் வலிந்து பேசிப் பழக விரும்பாத மண நிலையினர். எடுத்ததும் எவருடனும் நட்புக் கொள்ள மாட்டார் கள். நட்புக் கொண்டு பழகி விட்டால் மனதை மாற்றாமல் இணைந்து விடுவார்கள். இவர்களுடன் நெருங்கிப்பழகுபவர்கள் பெரும்பாலும் 1, 5, 9 எண்ணினராகவோ, இந்த எண்ணிகளில் பெயர் அமைந்தவர் களாகவோ இருப்பர்.

எண் 1 இனரின் நட்பு உயர்ந்ததாகவும், உயிர் உள்ளவரை உதவிகளும் ஒத்தாசைகளும் மிகுந்த நல்லதொரு நட்பாகவே இருக்கும்.

**தொழில்:-**

இவர்களுக்குப் பஸ், லொறி போன்ற வாகனங்களாலும், இரசாயனப் பொருள் எண்ணைப் பொருள், விற்பனையாலும், இரும்பு சம்பந்தமான வியாபாரத்தாலும், பொருள் சேர்க்கும் வாய்ப்பு உண்டு.

துணி, பீடி, சிகரட், சுருட்டு, புகையிலை, வியாபாரமும் இவர்களுக்கு உகந்தது. விவசாய மூலமும் பொருள் ஈட்டலாம், நீதிபதிகளாகவும், வழக்கறிஞர்களாவும், அரசியல் பிரமுகர்களாகவும், நன்கு பிரகாசிப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணவாழ்க்கை:-**

இந்த எண்ணினரில் பண்பு நிறைந்த ஆண்கள் மனைவியருடன் அன்புடன் பழகி மகிழ்ச்சியுடன் வாழ்வர். ஏனையோர் மனைவியரின் அன்புக்கோ, பண்புக்கோ கட்டுப்படாமல், எடுத்தெறிந்து பேசி நடப்பதால் மணவாழ்வு மகிழ்ச்சிகரமாக அமையாது.

இதே போல எண் 8 பெண்களும் அன்பும் பண்பும் உள்ளவர்களானால் கணவர்களுக்குக் கட்டுப்பட்டு வாழ்க்கை நடத்துவர், அல்லாதோர் கணவரை அலட்சியம் செய்வதால் வாழ்க்கையைப் பயனற்றதாக்கி விடுவர்.

பொதுவாக எண் 8 காரருக்குக் குடும்ப வாழ்வில் அன்பும் மகிழ்ச்சியும் எட்டாத கனியாக, கொம்புத் தேனாகவே இருக்கும்.

**நோய்:-**

பித்த தேகம் உடையவர்கள். இவர்களுக்குத் தலையிடி, கிறுகிறுப்பு (மூளை) சொத்தைப்பல், காது இரைச்சல், இரத்தத்தில் விஷ சேர்க்கை, வாய்வுப்பிடிப்பு, பூட்டு உழைவு போன்ற நோய்கள் காணப்படும். அதிக பித்த நீர் சுரப்பும், குடல் பலவீனமும் ஏற்படக்கூடும்.

**பொருத்தமான திகதிகள் :-**

1, 10, 19, 28, 5, 14, 23, 9, 18, 27 ஆகிய திகதிகளும், திகதி மாதம் வருடம், மூன்றையும் கூட்டினால் 1, 5 ,9 வரும் தினங்களும்.

**பொருத்தம் அற்ற திகதிகள் :-**

4, 8, 13, 17, 22, 26, 31 ஆகிய திகதிளும் திகதி, மாதம், வருடம், மூன்றையும் கூட்டினால் 4 அல்லது 8 வரும் தினங்களும்.

**பொருத்தமான நிறங்கள், உடை :-**

மஞ்சள் (Yellow) ஆழ்ந்த நீலம் (Dark Blue) பச்சை (Green)

**பொருத்தம் அற்ற நிறங்கள் உடை :-**

கறுப்பு, சிவப்பு.

**பொருத்தமான இரத்தினம் :-**

நீலக்கல் (Blue Sapphire) இது இந்திர நீலம் என்று கூறப்படும் உயர்ந்த வகையைச் சேர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொருத்தமான வாகனம் :-**

கூட்டு இலக்கம் : 1, 5, 9.

**பொருத்தம் அற்ற வகனம்:-**

கூட்டு இலக்கம் : 4, 8.

**எண் 8 ஆதிக்கம் பெற்றுப் பிறந்த உலகப் பிரமுகர் சிலர்**

| பெயர் | பிறந்த திகதி | எண்கள் | |
|---|---|---|---|
| | | பிறப்பு | கூட்டு |
| ஹரி ட்ரூமன் (அமெரிக்க ஜனாதிபதி) | 8-5-1884 | 8 | 7 |
| றொக் பெல்லர் (அமெரிக்க கோடீஸ்வரர் | 8- 7- 1839 | 8 | 9 |
| முஜிபூர் ரகுமான் (முன் நாள் பங்களாதேஷ் பிரதமர்) | 17- 3- 1920 | 8 | 5 |
| ஜே. ஆர் ஜயவர்த்தனா (இலங்கையின் முன் நாள் ஜனாதிபதி) | 17- 9- 1906 | 8 | 6 |
| ஜோர்ச் பேர்னாட்ஷோ (ஆங்கில எழுத்தாளர்) | 26- 7- 1856 | 8 | 8 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 11

## எண் 9 செவ்வாய் (Mars)

### ஆண்மை - சாதனை

எண் 9 செவ்வாய் கிரகத்தைக் குறிக்கும். இந்தக் கிரகத்துக்கு குஜன் அங்காரகன், நிலமகன் என்ற சிறப்புப் பெயர்களையும் சோதிட நூல்கள் குறிப்பிடுகின்றன. செவ்வாய் இரத்த காரகன் என்று கூறப்படுகிறது. காரணம், மனித உடலில் உள்ள இரத்தத்தின் விருத்தி இந்தக் கிரகத்தால் இயற்றப்படுகிறது.

ஆங்கில மாதங்களில் வரும் 9, 18, 27 ஆகிய திகதிகளில் பிறக்கிறவர்கள் செவ்வாய்க் கிரகத்தால் ஆளப்பட்டு எண் 9 இன் ஆதிக்கர் ஆகிறார்கள். இந்த எண்ணின் ஆதிக்கம் பெற்றவர்கள், யுத்த வீரர்களின் இயல்பைக் கொண்டவர்களாக இருப்பார்கள். மித மிஞ்சிய சரீரபலமும், மனோ தைரியமும் உடையவர்கள். நடுத்தர உயரமும் வசீகர தோற்றமும், அகன்ற தோள்களும் பெற்றிருப்பர். அஞ்சாத நெஞ்சமும், உணர்ச்சி வேகமும், நிறைந்தவர்களாக இருப்பர். மென்மை மிகு கிரகம் சந்திரன் என்றால் ஆண்மை மிகு கிரகம் செவ்வாய்.

முன் கோபம், எடுத்து எறிந்து பேசும் சுபாவம், ஒருவருக்கு அடங்கி நடக்க இயலாமை ஆகியன இவர்களுடைய குணம்.

நிர்வாகத் திறமையும், துணிச்சலும் சந்தர்ப்பங்களைச் சமாளிக்கும் ஆற்றலும் உடையவர்கள். பொதுவாக இவர்களுக்கு சமாதானத்தில் பிரியம் இருக்காது. எதையும் எதிர்த்துப் பேசுவதிலும், வாதாடுவதிலும் ஆர்வம் உடையவர்களாக இருப்பர். இருப்பினும் பரோபகார சிந்தையும், பிற நற்குணங்களும் தலை தூக்கி நிற்கும். செவ்வாய் போர்க்கிரகம், எனவே செவ்வாயின் ஆதிக்கம் பெற்ற 9 எண் காரர் நினைத்த கொள்கைக்காக வாதாடவும், போராடவும் தயங்கமாட்டார்கள். இவர்களுக்கு எதிரிகள் ஏற்படுவது இயல்பே.

இராணுவம், பொலிஸ், கடற்படை, ஆகாயப்படை, போன்ற துறைகளிலும், அரசியல் ராஜ தந்திரிகளாகவும், பொறியியல், மருத்துவத் துறையிலும், இரும்பு சம்பந்தமான தொழில் துறையிலும், இவர்களைக் காணலாம். தத்துவ ஞானிகளும், துறவிகளும் இந்த எண்ணினரில் உண்டு.

**குறிப்பு:-**

மார்ச் 21 முதல் ஏப்பிறில் 19 வரையில் உள்ள காலப் பகுதியிலாவது ஒக்ரோபர் 21 முதல் நவம்பர் 20 வரையிலான காலப் பகுதியிலாவது பிறந்தவர்களுக்கு மேற்கண்ட குணங்களும் பலன்களும் சிறப்பாகப் பொருந்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொதுவான குணங்கள்:-**

செவ்வாய் போர்க் கிரகம், ஆகையால் இவர்களுடைய வாழ்க்கை எந்த வகையிலும் போராட்டம் நிறைந்ததாகவே இருக்கும். கோபமும் முரட்டுத்தனமும் முன்னுக்கு நிற்கும்.

கல்வியறிவு கூடியவர்கள் கோபத்தையும் முரட்டுத் தனத்தையும் பொறுமையால் தணித்து, தாம் விரும்பியவற்றை, விவேகமாக வாதம் செய்து அடைந்து விடுவர். பெரிய பதவிகளிலும் அமர்ந்துவிடுவர்.

ஏனையோர் அறிவு இல்லாமையால் பலவிதமான சண்டை சச்சரவுகளிலும், சிக்கலிலும் மாட்டிக் கொண்டு அவதிப்படுவர். பொறுமையின்மையும் அவசர புத்தியும், இவர்களை நிதானமாக எதையும் செய்யவிடாது.

இவர்களில் இறைபக்தி நிறைந்த கண்ணியமானவர் களையும், போதைப் பொருள் பாவனையால் உடலையும் உள்ளத்தையும் கெடுத்துக் கொள்ளுபவர்களையும், பெண்களைச் சுற்றிவரும் காம நோயளர்களையும் காணலாம்.

**எண் 9 இன் (செவ்வாயின்) பலம் கூடியவர்கள்:-**

இவர்கள் நிச்சயமாக அதிஷ்டசாலிகள் ஆவர். உயர்ந்த பரம்பரையில், பெரிய குடும்பத்தில் பிறந்தவர்களாகவே இருப்பர். கல்வி, அறிவு, கண்ணியம், கடமை, அடக்கம் போன்ற நற்குணங்களுக்கு இருப்பிடமாக வாழ்வர்.

எல்லாம் தெரிந்திருந்தாலும், ஒன்றும் தெரியாதவர் போல் இருப்பர். அதிகம் பேச மாட்டார்கள். பண வசதி நிறைந்திருந்தாலும் படாடோபமின்றிச் சிக்கனமாகவே வாழ்வர். தீய பழங்கங்கள் எதுவும் இல்லாதவர்கள். முக்கிய காரியங்களில் முன்னின்று உழைக்கத் தயங்க மாட்டார்கள். முடிந்தவரை தான, தர்மம், பொதுப்பணி ஆகியன செய்வர். இவர்களில் பெரும்பாலோர் இறைபக்தி நிறைந்தவர்கள்.

இவர்கள் நல்ல உழைப்பாலும், நாணயமான வாழ்க்கை முறையாலும், நிச்சயமாக முன்னுக்கு வரமுடியும் என்று உறுதியாக நம்புபவர் கள். எதையும் சொல்லமாட்டார்கள். சொல்லிவிட்டால் செய்தே முடிப்பார்கள். இவர்கள் அதிகம் விரும்புவது தங்கள் உழைப்பு ஒன்றையே. வெறுப்பது வெட்டிப் பேச்சையும் வீண் பொழுது கழிப்பதையுமே.

இவர்களை, அறிஞர்களாக, கலைஞர்களாக, ஓவியர்களாக, சிற்பிகளாக, எழுத்தாளர்களாக, பத்திரிகை ஆசிரியர்களாக,

பொது நூலகப் பிரிவு மாநகர நூலக சேவை யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர்களாக, பொறியியலாளர்களாக, மருத்துவர்களாக, இரசாயனத் தொழிற்சாலை உரிமையாளர்களாக, விஞ்ஞானிகளாகப், புகழுடன் விளங்குவதைக் காணலாம்.

**எண் 9 இன் பலம் குறைந்தவர்கள்:-**

இவர்கள் பிறந்த குடும்பம் பெரும்பாலும் வாழ்ந்து தாழ்ந்த நிலையை எட்டியிருக்கும். எனவே தாம் பிறந்த குடும்பத்திற்காக இடையறாது உழைத்து உதவவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். இத்தகையவர்களுடைய உயர் கல்வி நோக்கமும், திட்டங்களும் குடும்ப நிலை காரணமாகப் பாதிக்கப்படும். சூழ்நிலை காரணமாகத் தமக்கு இயற்கையாக உள்ள கோப குணத்தை அடக்குவர். சிலர் கோபம் காரணமாகப் பலரையும் பகைத்துக் கொள்வர்.

**எண் 9 இன் பலம் இல்லாதவர்கள்:-**

இந்த வகையைச் சேர்ந்தவர்கள் அடக்கமுடியாத கோபக்காரர்களாகவும் முரட்டுச் சுபாவம் உள்ளவர்களாகவும், அவசர புத்திக்காரர்களாகவும், கொடுமையான குணம் உடையவர்களாகவும் இருப்பர். எதற்கும் துணிந்த இவர்களுடைய முடிவு துன்பகரமானதாக அமையும்.

**நண்பர்கள்:-**

இவர்களுக்கு 3, 5, 6, 9 எண்களில் பிறந்தவர்களோ, இந்த எண் வரிசையில் பெயர் அமைந்தவர்களோ, சிறந்த நண்பர்களாக இருக்க முடியும். எண் 2 நபர்களின் நட்பும் தொடர்பும் விபரீதமான விளைவுகளை ஏற்படுத்தும்.

எவ்வளவு நண்பர்கள் இருந்தாலும் இந்த எண்காரர் தங்கள் ஓயாத போராட்டத்தின் பின்னர் தான் தங்கள் காரியங்களில் வெற்றி பெறுவர். நண்பர்களின் உதவி அவ்வளவாகக் கிடைக்காது.

இந்த எண்ணின் நட்பு எண்ணான 5 நபர்கள், எவ்வித முயற்சியோ, பிரயத்தனமோ இன்றி வெற்றி பெற்றுவிடுவர். இவர்களுக்கு நண்பர்கள் பெரிய மனிதர் போன்றவர்களின் ஆதரவு என்றும் உண்டு. (இதுவே இந்த இரண்டு எண்ணினருக்கும் உள்ள வித்தியாசம்)

**தொழில்:-**

அரசியல்துறை, பாதுகாப்புத்துறை (Ploice, Army, Navy, Air Force), பொறியியல்துறை, மருத்துவத்துறை, விளையாட்டுத்துறை, கலைத்துறை ஆகியவற்றில் ஈடுபட்டுப் புகழுடன் பொருளும் சேர்த்து வாழலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணவாழ்க்கை:-**

9 எண்ணினர் இதன் நட்பு எண்களான 3, 5, 6, 9 திகதிகளில் பிறந்தவர்களையோ அல்லது இந்த எண்களின் வரிசையில் பெயர் அமைந்தவர்களையோ மணந்தால் மன மொத்த மகிழ்ச்சியான மண வாழ்வு அமையும்.

1, 4, 7, 8 திகதிகளில் பிறந்தோரையோ, அல்லது இந்த எண்களின் வரிசையில் பெயர் அமைந்தோரையோ, மணந்தால் வாழ்வில் சிக்கல்களும் அமைதியின்மையும் தோன்றியபடி இருக்கும்.

பகை எண்ணான 2 இன் வரிசையில் பிறந்தவரையோ, பெயர் அமைந்தவரையோ மணந்தால் வாழ்வு சூனியமாகிவிடும்.

**நோய்கள்:-**

இவர்களுக்கு உஷ்ணத்தால் ஏற்படக்கூடிய மூல நோய், இரத்தக் கட்டிகள், குடற்புண், விஷக்காய்ச்சல் போன்ற நோய்கள் உண்டாகும். வயிற்று வலி, தலையிடி, வாய்வுத் தொல்லை, வாதம் ஆகியன அடிக்கடி தோன்றித் தொல்லை கொடுக்கும்.

பெரும்பாலான இந்த எண்ணினரைப் பல்நோய்கள் பீடிக்கும். பயோறியா (Pyorrea) மற்றும் பூச்சிகளின் தாக்கம் ஆகியவை பற்களை பழுதடையச் செய்யும். சிலருக்கு கால் பாதங்களில் ஆணிகள் தோன்றி இயல்பாக நடப்பதற்கு இடையூறாக இருக்கும்.

**பொருத்தமான திகதிகள்:-**

3, 5, 6, 9, 12, 14, 15, 18, 21, 23, 24, 27, 30 ஆகிய திகதிகளும், திகதி மாதம் வருடம், மூன்றையும் கூட்டினால் 3, 5, 6, 9 வரும் தினங்களும்.

**பொருத்தம் அற்ற திகதிகள்:-**

2, 11, 20, 29 ஆகிய திகதிகளும், திகதி மாதம் வருடம், மூன்றையும் கூட்டினால் 2 வரும் தினங்களும்.

**பொருத்தமான நிறம், உடை:-**

ஆழ்ந்த சிவப்பு (Dark Red) சிவப்பின் எல்லா சாயல்களும் (All Light colours in Red) வெண் நீலம் (Very Light Blue).

**பொருத்தம் அற்ற நிறம், உடை:-**

பச்சை, கறுப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.
127052

**பொருத்தமான இரத்தினம்:-**

பவளம் (Coral), சிவப்புக் கல் (Ruby).

**பொருத்தமான வாகனம்:-**

கூட்டு இலக்கம் : 3, 5, 6, 9.

**பொருத்தம் அற்ற வாகனம்:-**

கூட்டு இலக்கம் : 2.

**எண் 9 ஆதிக்கம் பெற்றுப் பிறந்த உலகப் பிரமுகர் சிலர்**

| பெயர் | பிறந்த திகதி | எண்கள் | |
|---|---|---|---|
| | | பிறப்பு | கூட்டு |
| ஜோன் மில்ரன் (ஆங்கிலக் கவிஞர்) | 09.12.1608 | 9 | 9 |
| யூரி காகரின் (ரஷ்ய விண்வெளி வீரர் சந்திரனில் கால் வைத்தவர்) | 09.03.1934 | 9 | 2 |
| அயூப் கான் (முன் நாள் பாகிஸ்தான் ஜனாதிபதி) | 18.10.1908 | 9 | 1 |
| திருமதி விவியன் குணவர்த்தனா (இடது சாரிக்கட்சி) | 18.09.1916 | 9 | 8 |
| வில்ஹெம் கொன்றாட் ரோன்சன் (X றே கண்டு பிடித்தவர்) | 27.03.1845 | 9 | 3 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் - 12

**பிறப்பு எண்ணும் பெயர் எண்ணும்:-**

பிறப்பு எண் ஒருவருடைய அறிவு, ஆளுமை, அடிப் படைக் குணங்கள், பதவி, சமூக அந்தஸ்த்து போன்றவற்றைப் புலப்படுத்தும். இந்த வகையில் பிறப்பு எண் முக்கியத்துவம் பெறுகிறது. ஒருவர் எந்தத் திகதியில் பிறந்தாரோ, அதுவே அவருடைய பிறப்பு எண் ஆகும். 27 அன்று பிறந்தவருடைய பிறப்பு எண் 9. கிரகம் செவ்வாய். 30 அன்று பிறந்தவருடைய பிறப்பு எண் 3. கிரகம் குரு.

பிறப்பு எண்ணுக்கு அடுத்து முக்கியத்துவம் பெறுவது பெயர் எண். எண் கணிதமானது எண்களோடும் எழுத்துக்களோடும் கலந்து, சொல்லும் பொருளும் போலப் பிணைந்திருப்பதால், பிறப்பு எண்ணும், பெயர் எண்ணும் பொருந்தியிருக்க வேண்டியது அவசியமாகிறது. பொருந்தி அமையாவிட்டால், வாழ்க்கையில் வளர்ச்சி குன்றும். முன்னேற்றம் தடைப்படும். எதிர்பாராத விளைவுகள் ஏற்படும்.

பிறப்பு எண் எதுவோ, அதுவே பெயர் எண்ணாக அமைந்து விடுவது அதிர்ஷ்டம். ஆனால் பிறப்பு எண்ணும், பெயர் எண்ணும் ஒன்றாக அமைவது அபூர்வம்.

பிறப்பு எண்ணை மாற்றமுடியாது. ஆனால் பிறப்பு எண்ணுக்குப் பொருத்தமாகப் பெயர் எண்ணை அமைத்துக் கொள்ள முடியும் அல்லவா? இதனால் வாழ்க்கையில் முன்னேற்றம், மகிழ்ச்சி ஆகியன உண்டாகும்.

**பிறப்பு எண்ணுக்குப் பொருத்தமாகப் பெயர் எண் அமைப்பது எப்படி?**

உதாரணம்: 1 அ.செல்வராஜா - 05.12.1940 பிறந்தவர்.

A.S E L V A R A J AH

1+3+5+3+6+1+2+1+1+1+5 = 29 : 2

பிறப்பு எண் 5. பெயர் எண் 2.

பிறப்பு எண்ணும் பெயர் எண்ணும் ஒன்றாக அமைப்பதற்கு தகப்பனின் தகப்பன் பெயர், ஊர் பெயர், குடும்பப்பெயர், புனை பெயர் போன்றவைகளில் இருக்கும் முதல் எழுத்தைப் பயன் படுத்தலாம். செல்வராஜாவின் பாட்டன் பெயர் சின்னையா - SINNIAH.

S.A. S E L V A R A J A H

3+1+3+5+3+6+1+2+1+1+1+5 = 32 : 5



50870·

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு எழுத்தைச் சேர்த்ததும் இவருடைய பிறப்பு எண் 5 க்குப் பொருத்தமாகப், பெயர் எண் அமைந்ததை அவதானிக்கவும்.

உதாரணம் 2 : ம. ராமநாதன் - 09.06.1966 பிறந்தவர்

M. RAMAN AT HAN

4+2+1+4+1+5+1+4+5+1+5 = 33 : 6

பிறப்பு எண் 9. பெயர் எண் 6. பிறப்பு எண்ணுக்குப் பொருத்தமாகக் கீழ்க் கண்டவாறு எழுத்துக்களைக் குறைத்து எழுதலாம்.

M.R. N A T H A N

4+2+5+1+4+5+1+5 = 27 : 9

**பிறப்பு எண்ணும் கூட்டு எண்ணும் பகை எண்களாக இருந்தால்**

உதாரணம் 1 : 23.03.1961 பிறப்பு எண் 5, கூட்டு எண் 7, பிறப்பு எண்ணுக்கு கூட்டு எண் பகை. எனவே பிறப்பு எண் 5 க்கு நட்பு எண்ணான 9 இல் பெயரை அமைக்க வேண்டும்.

உதாரணம் 2 : 21.06.1950 பிறப்பு எண் 3 கூட்டு எண் 6. இவை பகை எண்கள். எனவே இரண்டு எண்களுக்கும் நட்பு எண்ணான 9 இல் பெயரை அமைக்க வேண்டும்.

உதாரணம் 3 : 20.04.1956 பிறப்பு எண் 2. கூட்டு எண் 9. இவை பகை எண்கள். எனவே இரண்டு எண்களுக்கும் பொருத்தமான எண் 1 இல் பெயரை அமைக்க வேண்டும்.

**முக்கிய குறிப்பு:** பிறப்பு எண்ணுக்குப் பொருத்தமாகப் பெயர் எண் அமைத்துக் கொள்ள கூறப்பட்ட ஆலோசனைகள் 1, 2, 3, 5, 6, 7, 9 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கு மட்டுமே நன்மையானது.

4, 8 எண்களைப் பிறப்பு எண்ணாக உடையவர்கள் இந்த எண்கள் வரும்படியாகப் பெயர்களை அமைப்பது நல்லதல்ல. இந்த எண்கள் எதிர்பாராத சிக்கல்களையும் ஏமாற்றத்தையும் அமைதியின்மையையும், சில சமயங்களில் உயிர் ஆபத்துக்களையும் ஏற்படுத்துவதாகத் தெரிகிறது.

12705



6087 CC
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே பிறப்பு எண் 4 ஆக உள்ளவர்கள், பெயர் எண் 1 வரும் படியும், 8 எண்காரர், பெயர் எண் 5 வரும் படியும், அமைத்துக் கொள்வது நல்லது.

மாற்றப்பட்ட பெயரைத் தொடர்ந்து உபயோகித்தும் எழுதியும் ஒப்பமிட்டும் வர, அந்த எண்ணின் சக்தி வளர்ந்து அதிர்ஷ்டம் தருவதாக அமையும். அந்த எண்ணின் சக்தியை வளர்க்க. அந்த எண்ணுக்குப் பொருத்தமான உடை, இரத்தினம் ஆகியவற்றை உபயோகிப்பதுடன், பொருத்தமான திகதிகளில் தமது காரியங்களைச் செய்யவும் தொடங்கவும் வழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

மாற்றிய பெயர் எழுத்துக்களுக்கு உரிய எண்களின் கூட்டுத் தொகை எத்தனையோ, அத்தனை முறை தினமும் தொடர்ந்து மன உறுதியுடன் எழுதிவர நாளடைவில் மாற்றங்கள் உண்டாவதை அவதானிக்க முடியும்.

KOHA
JPL





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது அடுத்த வெளியீடு......

திருமணப் பொருத்தங்கள்.

கூட்டுத் தொழில் (Partnership).

தொழில் தொடங்க ஏற்ற காலம்.

என்பன போன்றவற்றை உள்ளடக்கியதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org